Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dream Solutions Pvt Ltd
The Solutions People
.com வெளியீடுகள்
The King Of Multimedia

சுயகற்றலுக்கான தமிழில்
பல்லூடக குறுவட்டுக்கள்

| | | |
|---|---|---|
| Ms-Word-xp | Pagemaker | Java |
| Ms-Excel-xp | PhotoShop | TCP/IP |
| PowerPoint-xp | CorelDraw | SQL |
| Ms-Access-xp | Macromedia Flash | Thirukkural |
| Ms-FrontPage-xp | Computer Hardware | Thamizha |
| Ms-Visual Basic | 3D-Studio Max. | இன்னும் பல... |

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல. 0777 740413

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 16 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 21 (30.05.2005) திங்கட்கிழமை இதழ்:243

# புலிகளின் கிழக்குப் பகுதித் தளபதிகள் திரும்பிச் செல்வதை தடுப்பதற்கு முயற்சி!

## ஹெலி வழங்க மறுப்பு; தரைவழிப் பயணத்துக்கும் அரசு முட்டுக்கட்டை

கிளிநொச்சி —

வன்னியில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு ஆகியோர் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கான ஹெலிகொப்டர் வசதிகளை வழங்க முடியாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 2 ஆம் திகதி வன்னிக்குத் திரும்பிய திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் மற்றும் நான்கு போராளிகள் மீளவும் சம்பூருக்குச் செல்வதற்கு கடந்த வெள்ளிக்கிழமை அரச சமாதான செயலகம் ஊடாக ஹெலிகொப்டர் வசதி செய்து தரும்படி அரச அதிகாரிகளிடம் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால், பாதுகாப்புக் காரணங்களுக்காக இவர்களுக்கு ஹெலிகொப்டர் வசதி வழங்கமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை, மட்டக்களப்பு - கரடியனாற்றிலிருந்து கடந்த 13 ஆ திகதி வன்னிக்கு வந்த மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானுவும் ஐந்து போராளிகளும் திரும்பிச் செல்வதற்காக ஹெலிகொப்டர் வசதி பெற்றுத் தருமாறு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் முன்வைத்த கோரிக்கை குறித்தும், அரசு எந்தப் பதிலும் அளிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

அதேவேளை, ஒரு தொகுதி போராளிகள் மட்டக்களப்பு கறுத்தப்பாலத்திலிருந்து ஓமந்தைக்கும், ஓமந்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கும் - கிழக்கும் சிங்களவருடையது; புலிகளை யுத்தத்தால் வெல்லவேண்டும்!

### அத்துரலிய ரத்ன தேரர் சொல்கிறார்

கொழும்பு —

வடக்கும் கிழக்கும் சிங்களவர்களின் தாயகப் பிரதேசங்கள். எனவே, புலிகளை யுத்தத்தால் ஜனாதிபதி சந்திரிகா வெல்லவேண்டும். அதை மீறி பொதுக்கட்டமைப்பில் சந்திரிகா கையெழுத்திட்டால் கடுமையான முடிவுகளை மேற்கொள்ளப்போவதாக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.


'சண்டே லீடர்' பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள நீண்ட பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதிலும் ஜே.வி.பிக்கும் எமக்கும் ஒற்றுமை இருக்கலாம். ஆனால், இரு அமைப்புக்களுக்கும் இடையில் அனைத்து பிரச்சினைகளிலும் பாரிய வேறுபாடு உண்டு. 1982 ஆம் ஆண்டு ஜே.வி.பியினர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தனர். ஆனால் தற்போது நிலைமை வேறு.

அவர்களது கொள்கைகள் காலத்துக்கு காலம் மாறக்கூடியவை. இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருப்பதை ஜே.வி.பி ஒப்புக்கொள்கிறது. ஆனால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யுனிசெப்பின் வதிவிடப் பிரதிநிதி தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!



கிளிநொச்சி —

யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக இருந்து மாற்றலாகிச் செல்லும் ரெட்சைபன் - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பிரியாவிடை பெற்றார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளருடன் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் 20 ஆயிரம் படையினர் ஓட்டம்!

கொழும்பு —

இந்த மாதம் 9 ஆம் திகதியிலிருந்து

## புலிகளின் வான்படையால் போர் மூளுமென கண்காணிப்புக்குழுத் தலைவர் கூறவில்லை!

...ன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன அமைப்புக்களுக்கும் இடையில

(12 ஆம் பக்கம் பார்க்க)

பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் 20 ஆயிரம் படையினர் ஓட்டம்!

கொழும்பு—

இராணுவத்திலிருந்து இதுவரை 85 ஆயிரம் படையினர் தப்பியோடியுள்ளதாகவும் அதுவும் தற்போதைய போர்நிறுத்த காலத்தில் 20 ஆயிரம் படையினர் தப்பியோடியுள்ளதாகவும் இராணுவத்தின் நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களை முறையாக விலகிக்கொள்ளுமாறு காலத்திற்குக் காலம் அறிவிக்கப்பட்ட போதிலும், இதுவரை 11,657 தப்பியோடிய படையினர் இராணுவத்திலிருந்து சட்ட பூர்வமாக விலகிக்கொள்ளும் அனுமதியை பெறவில்லை.

இந்த மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட மன்னிப்புக் காலத்தில் - 3581 விண்ணப்பங்கள் தப்பியோடிய படையினரிடமிருந்து கிடைத்துள்ளன. இவற்றில் 1145 பேர் சட்டபூர்வமாக இராணுவத்திலிருந்து விலகுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றைய விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள தரவுகள் போதுமானவையாக இல்லாததால் அந்த விண்ணப்பதாரிகளுக்கான விலகல் அனுமதி தாமதமடைகின்றது.

எனினும், இந்த விண்ணப்பங்களுக்கான முடிவுகள் மூன்று மாதங்களுக்குள் வழங்கப்படும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வான்படையால் போர் மூளுமென கண்காணிப்புக்குழுத் தலைவர் கூறவில்லை!

## ஏ.எவ்.பி. செய்திக்கு மறுப்பு

கொழும்பு—

விடுதலைப்புலிகளின் வான்படையால் மீண்டும் போர் வெடிக்கலாமென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் ஏ.எவ்.பிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டதாக வெளியான செய்தி தவறானது எனவும், இதற்காக தாம் மனம் வருந்துவதாகவும்- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஊடகங்களில் வெளியான இந்தத் தவறான செய்தி குறித்து கண்காணிப்புக் குழு மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தச் செய்தியின் சரியான தகவலை ஏ.எவ்.பி. வெளியிட முன்னர் இலங்கை மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் பிழையான முறையில் வெளியிட்டுவிட்டன. இவ்வாறான செய்தியை பொறுப்பற்றவிதத்திலும், ஆதாரமற்ற வகையிலும் கண்காணிப்புக் குழு வெளியிடும் பழக்கத்தைக் கொண்டதல்ல.

விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதையை நாம் வானிலிருந்து பார்த்துள்ளோம். எனினும், விடுதலைப் புலிகளிடம் இரண்டு விமானங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுவது குறித்து நாம் அந்த இடத்திற்குச் செல்ல இயலாத காரணத்தால் அது குறித்து உறுதிப்படுத்த எம்மால் முடியாதுள்ளது.

எனினும், விடுதலைப் புலிகள் இலங்கை வான்பரப்பில் தமது விமானங்களை பறப்பில் ஈடுபடுத்தினால் அது சர்வதேச போக்குவரத்துச் சட்டங்களையும், இலங்கையின் சட்டத்தையும் மீறியதாக இருக்கும். ஏனெனில், இலங்கை வான்பரப்பு இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிவராம் கொலையை கண்டித்து கொழும்பில் மௌன ஊர்வலம்!

கொழும்பு—

ஊடகவியலாளர் மாமனிதர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் கொழும்பு நகரில் நேற்று மாலை மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டதுடன் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

ஹிரு குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் - இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் சுதந்திர ஊடக அமைப்பு என்பவற்றின் பிரதிநிதிகளும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் வகையில் வாயை கறுப்புத் துணியால் கட்டிய நிலையில் பெருந்தொகையான சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேற்று மாலை 3 மணியளவில் கொழும்பின் புறநகர்ப் பகுதியான பத்தரமுல்ல சந்தியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட ஊடகவியலாளர்கள் - ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றத்திற்கு அருகில் - சிவராம் கொலை செய்யப்பட்டு போடப்பட்டிருந்த இடம் வரையில் கடும் மழையையும் பொருட்படுத்தாமல் ஊர்வலமாகச் சென்றனர்.

சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் இந்த ஊர்வலம் நடைபெற்றது. 4.30 மணியளவில் சிவராமின் உடல் காணப்பட்ட பகுதியை ஊர்வலம் அடைந்தது. அங்கு தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் - மாமனிதர் சிவராமின் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து ஹிரு குழுவைச் சேர்ந்த பாஷண மற்றும் பல முக்கியஸ்தர்களும் உரை நிகழ்த்தினர்.

பெண்கள் உட்பட பெருந்தொகையான சிங்கள ஊடகவியலாளர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கட்டமைப்பு உருவாகாவிடினும்

# சர்வதேச சமூகத்தின் உதவிகள் வடக்கு - கிழக்குக்கு கிடைக்கும்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி

கொழும்பு —

புலிகளுடன் இணைந்து அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை உருவாக்காவிடினும் - தமிழர் தாயகப் பகுதிகளுக்கு சர்வதேச நிதியுதவிகள் பகிர்ந்தளிக்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.


ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அலெக்சாள்ரோ பெய்ரோ இதுகுறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -


பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாவிட்டாலும் உதவி வழங்கும் சர்வதேச நாடுகள், உறுதியளித்த உதவிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கு என

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எழுகலை இலக்கியப் பேரவையின் நூல்கள் அறிமுக விழா







எழுத்தாளர் சாந்தனின் இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியமும், மு.திருநாவுக்கரசுவின் சமஷ்டியா தனி நாடா ஆகிய இரு நூல்களுக்கான அறிமுக விழா நேற்று கிளிநொச்சியில் எழுகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், சாந்தனின் இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம் என்ற நூலுக்கான அறிமுகவுரையினை யோ.செ. யோகியும், த.குருகுலராசாவும் நிகழ்த்தினர்.

அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசுவின் சமஷ்டியா தனிநாடா என்ற நூலுக்கான அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம், மு.சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

பதிலுரைகளை நூலாசிரியரான சாந்தன், மு.திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கினர்.

இலக்கியப் படைப்பாளரான நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வன் நினைவுரையினை நமது ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ராதேயன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வடிசாலை ஊழியர்களின் வேலை நிறுத்தம் நான்காவது நாளாக இன்றும் தொடரும்!

## முடிவுக்குக் கொண்டுவர இன்று முக்கிய சந்திப்பு

பருத்தித்துறை—

திக்கம் வடிசாலை ஊழியர்கள் இன்று நன்காவது நாளாகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

அரசு, வர்த்தமானி மூலம் அறிவித்திருந்த இரண்டாயிரத்து ஐநூறு ரூபா அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு தமக்கும் வழங்க வேண்டும் எனக்கோரி கடந்த 27 ஆம் திகதி முதல் வடிசாலை ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வடிசாலையின் உற்பத்தி முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. அத்துடன், தற்போது அதிகமாக கள் உற்பத்தியாகும் பருவகாலமாக இருப்பதனால் யாழ். மாவட்டத்திலுள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க்ங்கள் சீவல் தொழிலாளர்களிடமிருந்து கொள்வனவு செய்த பெருமளவிலான கள் - சேகரிப்பு நிலையங்களில் தேங்கியிருப்பதுடன் வெளியே ஊற்றவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நான்காவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றுவரும் போராட்டத்தினை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக திக்கம் வடிசாலை ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிர்வாகத்தினருக்குமிடையிலான அவசர கலந்துரையாடல் இன்று நண்பகல் 12 மணிக்கு சமாச அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. தவராசா தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பனை, தென்னை வள அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு இன்று முதல் வன்னியில் கருத்தரங்கு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்குகள் இன்றுமுதல் வன்னியில் நடைபெறவுள்ளன.

இன்று கிளிநொச்சியில் தமிழ்ப் பாடத்துக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. அத்துடன் முல்லைத்தீவில் அளவையியல் பாடத்துக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை முல்லைத்தீவில் தமிழ்ப்பாடத்துக்கான கருத்தரங்கும், கிளிநொச்சியில் அளவையியல் பாடத்துக்கான கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி துணுக்காயில் தமிழ்ப்பாடத்துக்கான கருத்தரங்கும், அளவையியல் பாடத்துக்கான கருத்தரங்கும் நடைபெறவுள்ளன.

இங்கு தமிழ்ப்பாடக் கருத்தரங்கினை எஸ்.எஸ்.ஆனந்தனும், அளவையியல் பாடத்துக்கான கருத்தரங்கை வேல் சிவாநந்தனும் நடத்தவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்குகளை டொர்ஹம் தமிழ் அமைப்பு, கனேடிய வதிரி ஒன்றியம், கொழும்பு தெற்கு ரோட்டறிக் கழகம், சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகம் என்பன ஒழுங்கு செய்துள்ளன.

இந்தப் பாட நெறிகளுக்கான கருத்தரங்குகள் டொர்ஹம் தமிழ் அமைப்பைச் சேர்ந்த எம். சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீர் விநியோகத்திற்கு பொருட்கள் அன்பளிப்பு

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நோயாளர் விடுதிக்கு நீர் விநியோகம் செய்வதற்காக ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் திரு.மு. குணரட்ணம் வழங்கினார்.

# வைத்தீஸ்வராக் கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்—

வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா பிரதம விருந்தினராகவும், யாழ். கல்விவலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தங்கராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.


## சிறு விளம்பரம்

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P - 0779122836** நேரம்: காலை 9.00 - 8.30 வரை

(1176)



**ராஜா** யாழ்ப்பாணம்

லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்ரவி நடித்த



சூர்யா

ஆக்ஷன் படம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்



சந்திரமுகி

50 ஆவது நாளை நோக்கி...

காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந், மீனா நடித்த

**உளவுத்துறை**

பஸ் போக்குவரத்து
பாதை இல 782 – காரைநகர்/787
மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**நாகலிங்க** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

அறிந்தும் அறியாமலும்

காட்சிகள் 10.30,2.30, 6.30,9.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

தித்திக்குதே புகழ் ஜீவா, கஜாலா,ரகுவரன் மற்றும் பலர் நடித்த

ராம்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30



## தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கொழும்பு

### கூறுவிலை கோரல்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் அமைந்துள்ள மாணவர் இரசாயனவியல் ஆய்வுகூட புனரமைப்பு / மேம்படுத்தல் வேலைகளுக்கான கூறுவிலைகள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன.(இக்ராட் பதிவு தேவையில்லை)

கூறுவிலைப் படிவங்களை கல்லூரி அதிபர் அலுவலகத்தில் 08-06-2005 வரை மு.ப. 10.00 - பி.ப. 1.30 வரை மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 2000/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 16.06.2005 அன்று பிற்பகல் 2 மணிக்கு முன் அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும்.

எந்திரி மா. இராமதாசன்,
மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்-
கொழும்பு சார்பாக.

யூரோவில்இன்வெஸ்ட்மென்ட்,
866, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (1175)



## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

**Muthayamal Educational Institutions**

RASIPURAM - 637408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| | | |
| B.Sc. Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

**Call : 011-4512591, 0777 767818** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER

2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com

# புலிகளைத் தடைசெய்வதற்கு கனடிய அரசாங்கம் மறுப்பு!

றொறன்ரோ

விடுதலைப் புலிகளை தமது நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்பாக பிரகடனப்படுத்துவதற்கு, கனடிய அரசாங்கம் கடந்த வாரம் மறுத்துள்ளதாக, றொறன்ரோவிலிருந்து வெளிவரும் நஷனல் போஸ்ற் என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கையில் சமாதான முயற்சிகள் முறிவடையும் நிலையில் உள்ளதால் விடுதலைப் புலிகளை கனடாவில் தடை செய்வதில்லையென கனடிய மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆன் மக்கிலன் தெரிவித்துள்ளார்.

எனினும் ஈரான், இஸ்ரேல் மற்றும் ஆப்கானிஸ்தானிலுள்ள போராட்ட




அமைப்புக்கள் மூன்று - கனடா அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய கனடாவிலுள்ள தமிழீழ அமைப்பு, பல வருடங்களாக இரண்டு மில்லியன் டொலரளவில் நிதி சேகரித்து விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வருவதால் விடுதலைப்புலிகளை கனடாவில் தடை செய்ய வேண்டுமென, கனடிய உளவுப்பிரிவு தனது அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

ஆனால், உளவுப் பிரிவினரின் இந்த அறிக்கையை கனடா ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (தே)

## எஸ்.பியின் எம்.பி. பதவி 7 ஆம் திகதியுடன் காலாவதி!



கொழும்பு

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்காவின் நாடாளுமன்ற உறுப்புரிமை அடுத்த மாதம் 7 ஆம் திகதியுடன் காலாவதியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.


அரசியலமைப்பின் 66 ஆவது சரத்துக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் - தொடர்ச்சியாக 3 மாதங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்காவிடின் அவரது அங் கத்துவம் ரத்தாகும்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள, எஸ்.பி.திஸநாயக்கா, சபைக் கூட்டங்களில் பங்குபற்றாததால் அடுத்த மாதம் 7 ஆம் திகதியுடன் அவரது நாடாளுமன்ற அங்கத்துவம் ரத்தாகும்.

இவரது இடத்துக்கு - நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினராக ரேணுகாஹேரத் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

### பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தினால்

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்துப் போட்டியிடும்!



கொழும்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது குறித்து ஜே.வி.பி. ஆலோசனை நடத்தியுள்ளது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமானால் அரசாங்கத்திலிருந்து விலகவும் ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பில் தனியாக வேட்பாளரை நிறுத்துவது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை, ஜே.வி.பியின் மத்திய செயற்குழுவுக்கு அரசியல் பிரிவு வழங்கியுள்ளது. இதனையடுத்து, இது தொடர்பான அவசர கலந்துரையா டல் அடுத்த சில தினங்களில் நடத்தப் படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்காக தனது அங்கத்தவர்களை தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளை ஜே.வி.பி. தற்போது ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

# பொதுக்கட்டமைப்பு உடன்பாடு; அரசாங்கத்துக்குள் குழப்பநிலை!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



கொழும்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவி மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பை கைச்சாத்திடுவதற்கு அரசாங்கத்தின் பல்வேறு தரப்பினருக்கிடையில் சிக்கல்நிலை உருவாகியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொனராகலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது -

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொருவருக்கெதிராக பகிரங்கமாக குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றனர். இதனால் பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்திடுவதற்கு எதிராக அரசாங்கத்தின் ஒவ்வொரு தரப்பினரும் வேறுபட்ட கருத்துகளை முன்வைத்து வருகின்றமையால் பொதுக்கட்டமைப்பின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள் ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தர் சிலை தொடர்பாக புதனன்று மீண்டும் சந்திப்பு

திருகோணமலை

திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வணக்க ஸ்தலங்களை அப்புறப்படுத்துவது தொடர்பாக நாளைமுதல் விசேட சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையினருக்கும், சிங்கள பிரதிநிதிகளுக்கும் இடையே இந்தச் சந்திப்பு நிகழவுள்ளது.



திருகோணமலை நகரில் ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்பாக அமைச்சர்களுக்கும் தமிழ் மக்கள் பேரவையினருக்கும் இடையே கடந்த 25 ஆம் திகதி ஆளுநரில் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

நகரில் இருக்கும் சட்டவிரோத வணக்க ஸ்தலங்களை எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன்னர் அப்புறப்படுத்துவதற்கு நகரசபைக்கு சட்ட ஆலோசனை வழங்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தைக் கேட்பதென்று அந்த சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டது.

## மின்சாரகட்டண அதிகரிப்புக்கு அனுமதி கோரும் மின்சாரசபை



சபுகஸ்கந்த மின்நிலையம் (ஆவணப்படம்)

கொழும்பு

எரிபொருள் விலை அதிகரித்துள்ளதனை அடுத்து மின்கட்டணத்தை 20 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான ஆலோசனையை திறைசேரியிடம் முன்வைத்துள்ளதாக மின்சாரசபையின் அதிகாரி ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பினால் மின்சார சபைக்கு நாளாந்தம் ஏற்படும் நட்டம் ரூ 12 மில்லியனைத் தாண்டியுள்ளது. இதன்படி மின் அலகொன்றுக்கான நட்டம் ரூ 9.90 இலிருந்து ரூ 10.60 வரை அதி கரித்துள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு இதுவரை ஏற்பட்டுள்ள அனைத்து நட்டமும், 33 பில்லியன் ரூபாவரை அதிகரித்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.


இதற்கு மேலதிகமாக, நிரந்தர மின்கட்டணத்தை அதிகரித்தல், அரசினால் நிவாரண உதவிகள் வழங்கல், மின் அலகின் விலையை அதிகரித்தல் உட்பட ஏழு மாற்று யோசனைகள் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவத்தார். (தே)

## சிவராம் நினைவாக விசேட ஆராதனை

கொழும்பு

ஊடகவியலாளர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டு ஒரு மாதம் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு கொழும்பு - சென் அன்றூ தேவாலயத்தில் சனிக்கிழமை விசேட ஆராதனை நடத்தப்பட்டது.

ஊடகத்துறை நண்பர்கள், உறவுகள்



எனப் பெருமளவானோர் இந்த ஆராதனையில் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் சிவத்தம்பி, சுதந்திர ஊடக இயக்கத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரலால், சண்டேரைம்ஸ் பிரதி ஆசிரியர் ராஜ்பால் அபேநாயக்க ஆகியோர் இந்த ஆராதனையில் கலந்துகொண்டு இரங்கல் உரையை நிகழ்த்தினர்.

இந்த விசேட ஆராதனையில் ஐலன்ட் பத் திரிகையின் முன்னாள் ஆசிரியர் காமினி வீரக்கோன், இந்து பத்திரிகையின் இலங் கைக்கான நிருபர் சம்பந்தன், டெய்லி நியூஸ் முன்னாள் ஆசிரியர் லக்ஷ்மன் குணசேகர, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, ஜெகான் பெரேரா, தனுஸ் அபேசேகர ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

# இனிமேல் சமய பண்டிகைகளை முன்னிட்டு கைதிகளுக்கு பொதுமன்னிப்பு இல்லை

கொழும்பு

இனிவரும் காலங்களில் சமய மற்றும் பிற நிகழ்வுகளில், பொது மன்னிப்பு வழங்கி சிறைக்கைதிகளை விடுதலை செய்வதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது என சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கமைய இந்தத் தடவை இடம்பெற்ற வெசாக் நிகழ்வில் விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த 2500 கைதிகளுக்கும் விடுதலை வழங்கப்படவில்லையெனவும், சிறைச்சாலைத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு - சுதந்திரதினத்திற்கு மாத்திரமே வழங்கப்படும் என நீதியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பின் பின்னர் விடுதலை செய்யப்படும் சிறைக்கைதிகள், சட்டவிரோத செயல்கள் மற்றும் பிற குற்றங்களில் ஈடுபட்டு மீளவும் சிறைக்கு வருவதனால், இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதன் பின்னர் மத ரீதியான முக்கிய நாட்களில் நீண்ட காலம் சிறைவாசம் அனுபவிக்கும், நல்ல செயற்பாடுடன் கூடியவர்கள், தமது வீடுகளுக்குச் சென்று தங்கிவிட்டு, மீள சிறைக்குத் திரும்ப ஒரு வார கால அனுமதி வழங்கப்படும்.

கடந்த வருடம் சுதந்திர தினத்தன்று 2353 கைதிகளும், வெசாக் தினத்தன்று 1625 பேரும், ஜனாதிபதியின் பத்தாண்டு பதவியேற்பு பூர்த்தி நிகழ்வில் 1517




வெலிக்கடைச் சிறைச்சாலை (ஆவணப்படம்)

பேரும், பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

2005 சுதந்திர தினத்தன்று 2527 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று குறிப்பிட்டார். (தே)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்டில் மேற்கிந்திய அணிக்கு வெற்றிவாய்ப்பு!



பிரிட்ஜ்டவுன்—

முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற 573 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தப் போட்டியில் வெற்றிபெறுவதற்கான நம்பிக்கையுடன் உள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் டெஸ்ட் போட்டி பிரிட்ஜ்டவுன் நகரில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றுவருகிறது.

முதலில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் 345 ஓட்டங்களை எடுத்தது. லாரா 130 ஓட்டங்களை எடுத்தார்.

அதைத் தொடர்ந்து விளையாடிய பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 144 ஓட்டங்களுக்குள் சுருண்டது. 2ஆம் நாள் ஆட்ட நேரமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் 4 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களை எடுத்திருந்தது. சந்தர்போல் 37 ஓட்டங்களுடனும், ஹின்ட்ஸ் 14 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

3ஆம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் தொடங்கியதும் சந்தர்போல் அதிரடியாக அடித்து விளையாடி சதமடித்தார். அவருக்கு துணையாக விளையாடிக் கொண்டிருந்த ஹின்ட்ஸ் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதன்பின் எட்வேட் மட்டுமே 20 ஓட்டங்களை எடுத்தார். மற்றைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால் இரண்டாவது இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 371 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கப்டன் சந்தர்போல் 153 ஓட்டங்களை எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். 10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் அவர் இந்த ஓட்டங்களை எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் அப்ரிடி 3, ரசாக், கனேரியா, ஷபீர் அகமட் ஆகியோர் தலா 2, நவீட்-உல்-ஹசன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அதன்பின்பு 573 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி 2ஆவது இனிங்ஸை ஆடத் தொடங்கியது. ஆனால் ஒரு ஓட்டத்தை எடுப்பதற்குள்ளேயே பாகிஸ்தான்



2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

சல்மான் பட், யுனுஸ்கான் ஆகியோர் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். அவர்களைத் தொடர்ந்து யசீர் ஹமீட் 11, பசீட் கான் 23 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

3ஆவது நாள் ஆட்டநேர இறுதியில் பாகிஸ்தான் 4 விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்களை எடுத்திருந்தது. அசீம் கமல் 38 ஓட்டங்களுடனும், அப்ரிடி 32 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். அப்ரிடி அதிரடியாக விளையாடி 29 பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

இந்த டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற பாகிஸ்தான் இன்னும் 459 ஓட்டங்களை எடுக்க வேண்டும். ஆனால் கைவசம் 6 விக்கெட்டுக்கள் மட்டுமே இருப்பதால் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற அதிக வாய்ப்புள்ளது.

# வலைப்பந்தாட்டப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பினால் தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளின் மூன்று பிரிவுகளில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகள் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றின.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் 19 வயதுக்குட்பட்ட போட்டியில் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் மெதடிஸ்த அணி, கொக்குவில் இந்துவை வெற்றி கொண்டது.

17 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையும் போட்டியிட்டன. இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையை 38:6 என்ற புள்ளி அடிப்படையில் மிகவும் இலகுவாக வெற்றிபெற்றது.

15 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்று இந்த ஆண்டுக்கான சம்பியனானது.

# பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியில் ரஷ்ய வீராங்கனைகள் ஆதிக்கம்!

பாரிஸ்—

பிரெஞ் ஓபன் ரெனிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் கடைசி 16 பேரில் 6 ரஷ்யர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த எந்த ஆண்டுகளிலும் இல்லாத வளர்ச்சி இதுவாகும்.


1991ஆம் ஆண்டில் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளையும் சேர்த்து 3ஆவது சுற்றுவரை நுழைந்த ரஷ்ய மங்கையரின் எண்ணிக்கை வெறும் 2. 2005ஆம் ஆண்டில் இதுவரை நடைபெற்றுள்ள 2 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் கடைசி 32பேரைக் கணக்கில் கொண்டால், அவுஸ்ரேலிய ஓபனில் 9 பேரும், தற்போது பிரெஞ் ஓபனில் 6 பேரும் முன்னேறியுள்ளனர்.

நடப்புச் சம்பியனான ரஷ்யாவின் அனஸ்டாசியா மிஸ்கினா முதல் சுற்றிலேயே தோல்வியடைந்தார். அல்லது இந்த எண்ணிக்கை இன்னும் உயர்ந்திருக்கும்.

அதே நேரத்தில் தற்போது 4ஆவது சுற்றுவரை நுழைந்துள்ள வீராங்கனைகளில் ஒருவர் மட்டுமே அமெரிக்கர் (லின்ட்சே டேவன்போர்ட்)

4ஆவது சுற்று ஆட்டங்களில் தலா இரு ரஷ்ய வீராங்கனைகள் ஒருவரை ஒருவர் எதிர்த்து விளையாடவுள்ளதால், காலிறுதிக்கு 2 ரஷ்ய வீராங்கனைகள் நுழைவது உறுதியாகிவிட்டது.

# இங்கிலாந்துக்கு இனிங்ஸ் வெற்றி





லோட்ஸ்—

லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இனிங்ஸ் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

முதல் இனிங்ஸில் பங்களாதேஷ் அணி 108 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்ததையடுத்து, இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடி 3 விக்கெட் இழப்புக்கு 528 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.


இதையடுத்து தொடர்ந்து 2ஆவது இனிங்ஸில் ஆடிய பங்களாதேஷ் அணி 39.5 ஓவர்களில் 159 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததால்- ஒரு இனிங்ஸ் மற்றும் 261 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் பங்களாதேஷ் அணியின் சார்பில் ஜாவிட் ஒமர் 25, அப்ரப் அகமட் -32, பசார் 16, மசூத் 44 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பிளின்ரொப், ஜோன்ஸ் ஆகியோர் தலா 3, ஹொகாட், ஹர்மிசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ட்ரெஸ்கொதிக் தெரிவு செய்யப்பட்டார்.

## 15 வயது சிறுமியிடம் தோல்வியுற்றார் வீனஸ்!



பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் தோல்வியுற்றார். இவரை 3-6, 6-1, 1-6 என்ற செட் அடிப்படையில் வெற்றிகொண்ட பல்கேரிய வீராங்கனை செசில் கரன்ட்சேவாவுக்கு வயது 15தான் ஆகிறது. தரவரிசையில் 98ஆவது இடத்தில் இருப்பவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் சம்பியன்!

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பினால் தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்ட 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும், மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜொலிஸ்ரார் கிண்ண கிரிக்கெட்

# கே.சி.சி.சி - யங்ஸ்ரார் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன

யாழ்ப்பாணம்—

யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட 11 விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட நொக் அவுட் ரீதியிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் தகுதி பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை யாழ்.



இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதியாட்டங்களில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டு கே.சி.சி.சி அணியும் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை காலையில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 244 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் ரஜித் 60, விஜிதரன் 44, விஜயகர்ணன் 31, சுஜீவன் 16, சதீஸ்கண்ணா 16, பிரதீபன் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

விளையாட்டு

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணியின் சார்பில் தனுஸ்காந்தன் 3, சாம்சன் 2, செல்வராஜ், குணதாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 25 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

இதில் தனுஸ்காந்த் 38, காந்தன் 28, சாம்சன் 30, ரஜித்காந் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிருஷ்ணச்சந்திரா 4, ஜொனிட்டன் 3, ரஜித், சதீஸ்கண்ணா, சசிவர்மன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

அன்றையதினம் மாலை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் கே.சி.சி.சி அணி மோதியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 23 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் நவகீதன் 23, கிருஷ்ணகாந் 11, சஞ்சீவன் 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். ஏனைய எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறவில்லை.

பந்துவீச்சில் கொக்குவில் அணியின் சார்பில் சிற்சபேசன் 4, பிரதீபன், உமாநாத் ஆகியோர் தலா 2, ஜெயரூபன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி சனசமூக நிலைய அணி 14.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் பிரதீபன் ஆட்டமிழக்காமல் 25, சசிகரன் 11, உமாநாத் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அகிலன் 2, குமணன், நிரூபன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

# தலைவரின் பின்னால் உறுதியாக நின்று அனைத்து சுதந்திரத்தையும் பெறுவோம்

## புதுவையின் நூல் வெளியீட்டு விழாவில் இளம்பரிதி



(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரைவு இன்னும் எடுபட வில்லை. அது பற்றிய கதையே இல்லாத நேரத்தில், சென்ற வாரங்களில் பெரிதாக அடிபட்ட பொதுக் கட்டமைப்பு என்ற கதையை இன்று தமிழர்கள் எடுக்காத நிலையில், உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கான காலம் நெருங்கிய போதும் சந்திரிகா தான் வகுத்துக்கொண்ட அரசியல் நாடக ஏற்பாட்டின்படி பொதுக் கட்டமைப்பை ஒரு பெரிய விடயமாகக் காட்டினார்.

உயிரைக் கொடுத்தேனும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவேன் என்று சொன்னார். ஆனால், இந்த நிலை மாறி அது அப்படியே மறுதலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

கைலாசபதி கலையரங்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கவிதைத் தொகுப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் இளம்பரிதி தொடர்ந்து பேசுகையில் -

சிங்கள இனம் தங்களுக்குத் தாங்களே விலங்கையும் போட்டு, குழியையும் பறித்து பாதிப்பான நிலைக்கு கொண்டுபோகிற நேரத்திலே, தமிழினம் பாதிக்கப்படாமல் மீண்டெழுந்து தனித்துவமான, பாதுகாப்பான, சுதந்திரமானதொரு சூழலை சந்திக்கப்போகிறது. அவ்வாறானதொரு சூழலில் இந்தக் கவிதை நூல் வெளியீடு என்பது வரலாற்றின் பெறுமதியாகவே இருக்கிறது.

இந்திய இராணுவம் எமது மண்ணுக்கு வந்தபொழுது எமது மக்கள் மயக்கநிலையிலிருந்து விழித்தெழுந்து கொண்டார்கள். மக்களுடைய விழிப்பும், தெளிவும் அவர்களுடைய பாங்கும் எங்களுக்கு ஆதரவாக இருந்ததனால் அந்த வல்லாதிக்க சக்தி தோற்கடிக்கப்பட்டது.

அத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அன்று நாம் பலவீனமாக இருந்தோம். ஆனால், இன்றும் நாம் அவ்வாறானதொரு நிலையில் இல்லை. மிகப்பலம் பொருந்திய எல்லா வளத்தையும் கொண்ட, எல்லா வலிமையையும் கொண்ட, எல்லாவற்றையும் எதிர்கொண்டு முறியடிக்கக்கூடிய ஒரு தளத்தை மக்களும் கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தளத்தில் நின்று போராடும் விடுதலைப் புலிகளும் கொண்டிருக்கிறார்கள்.

வல்லமையான சக்திகள் எப்பொழுதும் உலகின் போக்கைத் தீர்மானிக்கின்றன. அந்தச் சக்திகளை நோக்கியே உலகமும் நகர்கிறது. அந்த வகையில் நாங்கள் வல்லமை உள்ளவர்களாக இருப்போம். வல்லமை என்பது எங்கள் மக்கள் என்ற தளத்திலிருந்துதான் பிறக்கிறது.

அந்த மக்களின் பலம் என்றும் எம் தலைவனின் பின்னால் உறுதியாக இருக்கின்றபொழுது அந்தப் பலத்தில் நின்று எமக்கு வரும் நெருக்கடிகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விடிவு பெறுவோம், வெற்றி காணுவோம். ஒரு மானிட மேம்பாடு கொண்ட ஒரு அரசியல், சமூக, பொருளாதார விடுதலையை நாங்கள் பெறுவோம், மகிழ்ச்சியாக இருப்போம். அதை இந்தக் கவிஞனின் உணர்வு எங்களுக்கு ஊட்டி நிற்கிறது எனத் தெரிவித்தார்.

### உயிர்ப்பூட்டல் குழு அமைப்பு

(சுதுமலை)

பொருளாதார அரசியல் வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்தி பெண்கள் சுயமாக வாழ்வதற்கு பல்வேறு ஊக்குவிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் அரியாலையில் 30 பேர் அடங்கலான உயிர்ப்பூட்டல் குழுவை கியூடெக் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

சமூகத்தில் புதிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் அருட்தந்தை றெக்ஸ், இணைப்பாளர் ஜோசப் பாலா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர். (91)

### நெடுந்தீவு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வடக்கு - கிழக்கு மாகாண சபை இந்த ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் மூலம் நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக்கென நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியிலிருந்து கடைத்தொகுதிக்கான கட்டடம் அமைப்பதற்கு மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், மரக்கறிச் சந்தை அமைப்பதற்கு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (113)

## நீண்டகாலமாகத் திருத்தப்படாத குடத்தனை - பொற்பதி வீதி!

(வடமராட்சி கிழக்கு)

குடத்தனை - பொற்பதி வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளதால் அந்தப் பகுதி மக்கள் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குடத்தனை நடுப் பகுதியிலிருந்து பொற்பதி வரையான வீதியில் பாரிய குழிகள் தோன்றியுள்ளதுடன், வீதி முழுவதும் மணல் உள்ளமையால் இந்த வீதியால் போக்குவரத்து செய்யமுடியாத நிலையிலுள்ளது.

கடந்த சில மாதங்களாக வீதி புனரமைப்புக்கென கற்கள் பறிக்கப்பட்டபோதிலும், புனரமைப்பு பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான நடவடிக்கை எடுக்காமையும், ஒப்பந்தக்காரரின் அசமந்தப் போக்குமே வீதி புனரமைக்கப்படாமைக்கான காரணங்களென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குடத்தனைச் சந்தியிலிருந்து - நடுக்குடத்தனை வரையான வீதி திருத்தப்பட்ட போதிலும், நடுக்குடத்தனையிலிருந்து பொற்பதி வரையான வீதியே திருத்தப்படாமல் உள்ளது.

இதேவேளை, புனித நகர் கிராமத்திற்கான வீதியும் நீண்டகாலமாகக் கற்கள் பறிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தக்காரர் - அரச அதிகாரிகளின் இழுபறியால் புனரமைக்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்பாக வடமராட்சியில் கலந்துரையாடல்

(நெல்லியடி)

தமிழ்மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் -வடமராட்சிப் பகுதியில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கிராமந்தோறும் நடத்துவதற்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நெல்லியடி நெல்லை திருமுருகன் திருமண மண்டபத்தில், வடமராட்சி வடக்கு கடற்தொழில்லாளர் சங்க சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கடந்துரையாடலில் வடமராட்சி பகுதி மக்களுக்கு தற்கால அரசியல் சூழ்நிலையைத் தெளிவுபடுத்தும் அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்காக கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான மக்கள் பிரதிநிதிகளில் இருந்து 120 பேச்சாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அரசியல் விழிப்புணர்வுக் கட்டுமானக் கருத்தரங்குகளுக்காக -

1. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள்.
2. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நெருக்கடிக்குள் தள்ளும் அரசின் அதிகரித்துவரும் செயற்பாடுகள்.
3. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடித்துக்கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வுகள் வழங்கப்படாமல் திட்டமிட்டபடி தமிழ்மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைப்பது பற்றிய அரசின் தந்திரோபாயம்
4. அரசின் யுத்தத்துக்கான தயார்ப்படுத்தலும், தூண்டுதலும்.
5. அரச படைகளின் கடந்தகால இன அழிப்பும், படுகொலைகளும்.
6. துரோகிகளின் துரோகத்தனமான செயற்பாடுகளும், எம்மினத்துக்குள் ஏற்படுத்திய விளைவுகளும்.
7. மாவீரர் அர்ப்பணிப்பும், தியாகங்களும் - தலைவரின் உறுதியும்
8. சமூக சீரழிவுக்கான தற்கால நடைமுறைகளைச் சித்தரித்தல்.

ஆகிய தலைப்புகளில் சகல மக்கள் பிரதிநிதிகளிடமும் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்ணன், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பன் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (14)

### நெடுந்தீவு பிரதேசத்தில்

## செங்கண்மாரி பரவுவதை தடுக்க சுகாதார பிரிவினர் ஏற்பாடு!

(நெடுந்தீவு)

செங்கண்மாரி நோய் பரவுவதைத் தடுத்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய விளம்பரங்கள் நெடுந்தீவு பொது சுகாதாரப் பரிசோதகரால் தயாரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்தில் கடந்த பல மாதங்களாகப் பரவிவரும் செங்கண்மாரி நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே சுகாதாரப் பிரிவினரால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நோய் ஏற்படுவதற்கான காரணம், கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் நோய் வந்தவர்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் தொடர்பாக இந்த விளம்பர பிரசுரத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரத்துக்கு வட இலங்கை சர்வோதயத்தின் புங்குடுதீவு கிளை அனுசரணையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## யு.என்.டி.பி. திட்டங்கள் குறித்து செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் யு.என்.டி.பி நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தலைமையில் அரசாங்க செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், சுனாமி அனர்த்தப் பிரதேசங்களின் பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (21)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டுபேர் படுகாயம்!

(கோண்டாவில்)

கோண்டாவில் டிப்போ வீதியில் எதிரெதிரே வந்துகொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. பலாலி வீதியால் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், கோண்டாவிலிலிருந்து சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுமே இவ்வாறு நேரெதிரே மோதி விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த குமாரசாமி - கோகுலரூபன் (வயது 23) என்பவரும், யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த நபரின் சி.பி.இசற் மோட்டார் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிகிறது. (82)

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் குருவளை நலன்புரி நிலைய மக்கள்

அளவெட்டி குருவளை நலன்புரி நிலையத்திலுள்ள மக்கள் - அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பலாலி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களே கடந்த 15 வருடங்களாக இங்கு வசித்து வருகின்றனர்.

சுகாதார மருத்துவ வசதிகள், குடிநீர் இன்மை, குடிமனைகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதாகவும், தொற்று நோய்க்கு ஆளாவோர் தொகை அதிகரித்துவருவதாகவும் நலன்புரி நிலைய மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களால் அங்குள்ள மாணவர்களுக்கு மாலைநேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு வசதிகள் இல்லாதபோதும் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

## விபத்தில் இளைஞர் காயம்

ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளுடன் பிக்கப் வான் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காலிலும், கையிலும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் கரணவாய், கரவெட்டியைச் சோந்த பி.கஜேந்திரன் (வயது 28) என்பவரே காயமடைந்தவராவார்.

சம்பவதினம் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது அதே பாதையால் பின்தொடர்ந்து வந்த பிக்கப் ரக வான் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.




# அதிர்வலைகள்



சிறுகதை

க.ஆதவன்

அந்த மண்டபம் முழுவதும் இசையில் குளித்துக்கொண்டிருந்தது.

செவிகளூடே புகுந்த ஒலி அலைகள்... இதயத்தினுள் சென்று, உடம்பு பூராகவும் அதிர்வை ஏற்படுத்தியது. 'கானடா' இராகம். தனககே உரிய இன்பத்தையும், உதவேகத்தையும் வழங்கிக் கொண்டிருந்தது.

பாடிக்கொண்டிருப்பவர் தன்னை மறந்து அதிலேயே லயித்திருந்தார். ஆம்! புகழ்பெற்ற இசை மேதை பாலமுரளிகிருஷ்ணாதான்! சொல்லவா வேண்டும்?

நாங்கள் இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தோம். ஆத்மாமீது ஒரு உத்வேகத்தை... உரத்தை... உறுதியை... வழங்கிக்கொண்டிருந்த அந்த உச்சஸ்தாயி அலைகள்... எங்கோ ஒரு அதியுயர் மலையுச்சியில் - வெற்றிவாகை சூடிய வீரனைப்போல்... சுதந்திரக் கொடியை நாட்டிய பெருமிதத்தின் எக்காளிப்பில் மிதப்பதுபோன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

திடீரென என்கையை இறுகப் பற்றினான் பாலன். நான் திரும்பிப் பார்த்தேன். அவன் கண்கள் மூடியிருந்தன. ஆனால் கண்களின் அருகில் கன்னம் வழியாக நீர் வழிந்து கொண்டிருந்தது.

மிக மிக மென்மையுள்ளம் கொண்டவன் பாலன் என்பது எனக்கு நன்கு தெரியும். அந்த இசையலைகள் அவனது ஆத்மீக பலத்தைச் சோதித்திருக்கவேண்டும். இசை அலைகளுக்குக் கருத்துருவம் கொடுத்து தன் உணர்ச்சிகளை இலட்சியத்தின் மீதேற்றி- அந்த இலட்சியம் வெறும் கனவாய்ப் போய்விடுமோ? என்ற ஆதங்கத்தில் வந்த கண்ணீர்தான் அது என்பதைப் புரிந்துகொண்டேன்.

"பாலன், எழும்பு இனிக் காணும வா போவம்."

என்று சொல்லி அவனையும் இழுத்துக்கொண்டு மெதுவாக மண்டபத்தைவிட்டு வெளியேறினேன்.

நியாந்தர் விளக்குகள் தெருவை மஞ்சலாக மாற்றியிருந்தன. சைக்கிளில் வந்துகொண்டிருந்தோம். நான் பின்னுக்கு 'கரியரில்' இருந்தேன். பாலன் மிதித்துக்கொண்டிருந்தான். மண்ணையும், மக்களையும், 7 கோடி தமிழ் மக்களையும் சீரழிக்கும் கோடம்பாக்க கனவுத் தொழிற்சாலையைக் கடந்து கொண்டிருந்தோம்.

"மாஸ், வயித்துக்கை குத்துது" என்றான் பாலன்.

'மாஸ்ரர்', என்று என்னை ஏனையோர் அழைப்பர். பாலன் மட்டும் அதனை மேலும் குறுக்கிச் செல்லமாக 'மாஸ்' என்று கூப்பிடுவான்.

அருகில் - பெரிய 'கட் அவுட்டில்' - மரக்கட்டையால் AK47 செய்து, அதற்குக் கறுப்புப் 'பெயின்ற்' அடித்து, அதனைத் தன் கையில் பிடித்தபடி, அசடு வழியும் ஒரு தமிழ்நாட்டுக் கதாநாயகனின் படம் இருந்தது. அதைப் பார்த்துத்தான் நக்கலாக வயித்துக்கை குத்துது என்று சொல்கிறான் என நினைத்துச் சிரித்தேன்.

சிறிது நேரம மௌனத்தில் கழிய... திடீரென்று சைக்கிளை நிறுத்தினான் பாலன்.

"மாஸ், நல்லா வயித்தை வலிக்குது. தலை எல்லாஞ் சுத்துது" என்று சொல்லிவிட்டு, வயித்தைப் பொத்திப்பிடிச்சுக்கொண்டு தெருக்கரையில் அப்பிடியே குந்திவிட்டான் பாலன்.

நான் நன்றாகப் பயந்துவிட்டேன். உடனே ஆட்டோவில் அவனை ஏற்றி அருகிலுள்ள மருத்துவமனையில் அவனைச் சேர்த்து விட்டு ஏனையோர்க்கும் தகவல் கொடுத்தேன்.

அவனுக்கு கல் அடைசல் உடனடியாக ஒப்பரேஷன் செய்யவேண்டும். அவனைப் பார்க்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது.

நாங்களிருவரும் ஒரு தனி அறையில் விடப்பட்டோம்.

இன்னும் 10 நிமிஷத்தில் அவனுக்கு மயக்க ஊசி போடப்போகிறார்கள். அவனது வயிற்றைக் கிழிக்கப் போகிறார்கள்.

பாலன் விக்கி... விக்கி... கேவிக் கேவி அழுதுகொண்டிருந்தான். அவனுக்கு ஊசிகள், கத்திகள் போன்றவற்றைப் பற்றிய பயம் சிறு வயதிலிருந்தே இருந்திருக்கிறது என்பதை நண்பர்கள் மூலம் நான் அறிந்திருந்தேன்.

"ஏன்ரா இப்ப அழுறாய்? இது சின்ன ஒப்பரேஷன். இதுக்குப் போய்...?" என்றேன்.

"மாஸ், நான் நாட்டுக்குப் போவேணும். எனக்குப் பிடிச்ச G3 ஐ தூக்க வேணும். என்ரை ஊரை ஆக்கிரமிச்ச பண்டியலைச் சல்லடை போட வேணும். அதுக்கிடையிலை இந்தச் சனியன்... (வயித்தைக் காட்டினான்) தற்செயலாய் எனக்கேதான் ஒண்டு நடந்தா...

நான் இவ்வளவுநாளும் வளத்து வந்த இந்த உடம்பு...

ஈழத்துக்குப் பிரியோசனப்படாமல் போடும்..."

மேலும் கேவினான்.

அறைவாசலில் - வெள்ளைத் தாதி ஊசியுடன் வந்து நின்றாள். நான் அவளிடம் 2 நிமிடம் கடன் கேட்டேன்.

"பாலா, நீ கட்டாயம் நாட்டுக்குப் போவாய். உன்ரை லட்சியம் மட்டுமில்லை, எங்கடை எல்லாற்றை லட்சியமும் நிறைவேறத்தான் போகுது. பயபபிடாதை. இப்ப உனக்குததேவை உன்ரை உடல் இல்லை. உன்ரை ஆத்ம பலந்தான்."

என்று சொல்லிவிட்டு அவன் கையை இறுக ஒருதரம் அழுத்திவிட்டு வெளியேறினேன்.

அவனது கண்கள் நேரே என்னைப் பார்த்தன. எத்தனை லட்சியங்களையும், கனவுகளையும் அந்தப் பிஞ்சுக் கண்கள் உள்ளே வைத்திருக்கின்றன.

ஒப்பரேஷன் நல்லபடியாய் முடிந்தது. அவன் செவியருகே பாலமுரளி கிருஸ்ணாவின் இசையலைகளை அவ்வப்போது 'ஒலிப்பேழையில்' பரப்பிக்கொண்டிருந்தேன்.

அவனது பழைய நக்கலும், சிரிப்பும் வருவதற்கு இருவாரங்கள் ஆயிற்று.

பழையபடி அவன் போராளியாய் வந்துவிட்டான்.

வெய்யில் கொதித்துக்கொண்டிருந்த ஒரு நடுப்பகலில் - வியர்க்க விறுவிறுக்க சைக்கிளில் வந்துநின்று 'பெல்' அடித்தபடி...

"மாஸ், மாஸ்" என்று கத்தினான் பாலன்.

நான் பதறிப்போனேன்.

"என்னடா நடந்தது" சிரி சிரியென்று சிரித்தான். ஒரு பைத்தியக்காரனைப்போல் சிரித்தான். நான் அவனுக்குப் பின்னால் திரிந்தேன். அவன் வீடுமுழுக்க நடந்தான். சிரித்தான். நடிகர்களைப்போல் 'போஸ்' கொடுத்தான். திரும்பினான். சிரித்தான். கடைசியில் சொன்னான்.

"மாஸ், நான் நாளைக்கு நாட்டுக்குப்போறன், காலமதான் ஓடர் வந்தது" என்றான்.

மகிழ்ச்சிக் கடலில் துள்ளினான். "சரி, அப்ப இரவைக்கு வீட்டைவந்து சாப்பிடன்" என்றேன்.

சரி, என்றுகூடச் சொல்லாமல் ஒரு குழந்தையைப்போல் ஓடிச்சென்று சைக்கிளில் ஏறித்தாவி சுட்டெரிக்கும் அந்த வெய்யிலில் மறைந்து போனான்.

இரவு வந்தான்.

சாப்பிட்டான்.

அதிகம் பேசவில்லை.

போகும்போது மட்டும் - ஆரத்தழுவினான். தான் போட்டிருந்த உடைகளைக் கழற்றி எனக்குத் தந்தான். அங்கே கிடந்த எனது உடைகளை அணிந்து கொண்டான்.

போய்விட்டான்.

சிலநாட்களின் பின்னர்,

நான் வாழ்வில் கேட்கவிரும்பாத சேதி வருகிறது.

பாரதநாட்டின் - காந்திதேசத்தின் சூதாட்டத்தில் மாற்று இயக்கத்தினருடைய கூட்டுச்சதியில் -

பாலனைப் பின்புறமிருந்து சுட்டுத் தள்ளிச் சல்லடை போட்டாயிற்றாம்.

அவன் பிறந்தது வவுனியாவில். அவனது கனவு G3யால் தன் கிராமத்தை ஆக்கிரமித்த ஆக்கிரமிப்பாளரைச் சல்லடைபோட வேண்டுமென்பது.

'கானடா' இராகத்தின் உச்சஸ்தாயி இசையலைகள் அதிர்வுகளாய் வவுனியா எங்கும் பரவுகிறது. அந்த அலைகள் பாலனைப்போல் பல பாலகர்களைப் பாதிக்கிறது.

பாலனின் கனவலைகளும்... பாலகர்களின் உணர்வலைகளும்... மலையுச்சியொன்றில் சுதந்திரக் கொடியை நாட்டும் மாவீரனின் எக்காளம்போல் வவுனியா எங்கும் அதிர்ந்து கொண்டிருக்கின்றன.

## வேடதாரியும் சமாதானமும்

அந்த இசைக் கலைஞன்
முட்கம்பிகளால் சுற்றி அடைக்கப்பட்டிருந்த
நகரத்தைக் கடந்து வந்திருக்கின்றான்.

சமாதானத்துக்கான இசைநரம்புகள்
அறுந்து தொங்கும் வாத்தியத்தை
தோளில் மாட்டியிருந்தான்
வெளிர் நீல நிறமான ஆகாயத்தில்
பறந்து கொண்டிருந்த
பிக்காசோவின் அமைதிப்பறவை
சிறகிழந்து போனதைப் பற்றி என்னுடன்
மணிக்கணக்காகப் பேசினான்.

சமாதான வேடதாரிக்கான ஒப்பனைக்காரர்கள்
வெட்கமும் அவமானமும்
அடையநேர்ந்தாலும்
'அது பத்திரிகைகளில் சரிவந்து விடுமென்று'
தம்மைச் சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள்
பிரதியை எழுதி திரை மறைவில்
வைத்துக் கொண்டிருப்பவனுக்கோ
சமாதான வேடதாரி பழக்கதோசத்தில்
வாய் தவறி எதையாவது உளறி விட்டால்
என்ற பயம் வேறு
ஒளி அமைப்பாளர்களோ
தேவையேற்படின்
காட்சிகளை இருளிலேயே
நிகழ்த்தி விடலாமென்று
தம்மைச் சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள்.
உலக சமாதானத்திற்கான ஓவியம் குறித்து
உனக்கு தெரிந்தவற்றுள்
எதையாவதொன்றை
அவர்களுக்குக் காண்பிக்க கூடாதாவென்று
கேட்டேன்
அவன் சிரித்தான்
சரி இசைக்கலைஞனே!
முடிந்தால் சமாதானத்திற்கான ஒரு
மெட்டுப் போட்டுத் தரமுடியுமா என்று
கெஞ்சிக்கேட்டேன்.


இடியும் மின்னலுமான பேரிசை முழங்கிற்று
மேகங்கள் கருமுகில்களால் சூழ்ந்து
சொரிவனப் பொழிவது போன்ற
இசைபெருகிற்று
காற்றின் உடல் தரித்த இசைக் கலைஞன்
எனது இளம் வீரர்களால்
போரில் வீழ்த்தப்பட்ட
டாங்கிகளில் துளைகள் ஊடாக நுழைந்து
இசையாய் நிரம்பினான்.


யுத்த டாங்கிகளுக்கருகில்
புற்களாலான கூடொன்றில்
தனது குஞ்சுகளுடன்
சாம்பலில் குளித்ததைப் போன்ற நிறத்தை
உடைய காணாங்குருவி
திசைகளை பார்த்திருந்தபடி இருந்தது.

- தா.பாலகணேசன்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கிழக்கில் பிரமிக்கும் ஒளியின் சாரல் புகழேந்தி ஓவியங்கள்!





[illegible] படித்துக் கொள்ளும் சுழியின் பிரமிப்பு ஆழ்கடலின் அகலத்திலும் நீளத்திலும் தன்னை மையப்படுத்தி விடுவது போல சுழன்றடித்து, ஆட்டத்தின் அதிர்வு அலைகள் பரவுவது போல எல்லா இடங்களும் பேசப்படுகின்ற புகழேந்தியின் ஓவியங்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையினை அமுல்படுத்தி நிற்கின்றது.

தலைகுனிவு, அடக்கம் வாழ்வின் கடைசி சந்தர்ப்பத்திலும் காப்பாற்றப்படாமல் அநாதரவாக நின்ற ஒவ்வொருவரின் மூச்சு, பயனற்றுப்போன காலங்களில் அழிக்கப்பட்ட முறைகள் பல கோலங்களாக புள்ளியிட்டு ஒவ்வொருவரின் மனதையும் காயவிட்டு, தாகத்திற்கு தண்ணீர் கேட்கின்றது.

சிவப்பு நிறமல்ல நிஜம், கத்தியின் கூர்மையில் தோய்ந்த போது, மரத்துப் போன கரங்களுக்கு வலி தெரியாத நாட்களில் குருதியின் கிறுக்கல்கள் தான் புகழேந்தியின் ஓவியங்கள்.

ஒவ்வொரு பார்வையாளர்களையும் துப்பாக்கி முனையில் சிந்திக்கின்ற, போராடினால் மட்டுமே விடிவு என்கிற ஒவ்வொரு ஓவியத்தூண்களும் சரிந்திருக்கின்ற மனதை தூக்கி நிறுத்தி விடுகின்றது.

கற்பனைகளையும், வெளிப்பூசல்களையும் நிறைத்திருக்காத உண்மை நிகழ்வை வடித்திருக்கின்ற இவரது ஓவியங்கள், வெட்டப்பட்ட உடன் இரத்தமும், வலியும் சேர்ந்து வருவது போல எம்மை பல தடவை தண்ணீரில் மூழ்கி எழுப்புவது போலல்லாமல் ஒரு தடவையில் திக்கு முக்காட வைக்கும் நினைவுகள் கிட்டப் பார்வையுள்ள கண்களைத் துடைத்து விடுகிறது.

நிழல் இல்லாத மரங்களாக அறுந்து போயிருக்கின்ற வேர்களில் மட்டும் படாமலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உயிர்ப்பு, அதிகமான சூட்டில் கருகியும், மெலிந்தும் அதன் உருவமற்ற மாறுபட்ட உருவம் தீனி இல்லாமல் என்னையே உண்பது போல தெரிகின்ற பார்வையில் புகழேந்தியின் ஓவியங்கள் எனக்கும் பசியினை உண்டாக்கி விடுகின்றது.

வேர் பரவும் ஆழம் மண்ணிலும், மனத்திலும் கூடவாக இருக்கின்ற போதுதான் சிந்திக்கத் தூண்டுகின்ற அதற்குள் விடை காணுகின்ற போது தெளிவான அடையாளங்களில் கிடைக்கின்றது.

நீரில் நனைந்து காய்ந்தாலும் அந்த நிலத்தின் வலிமை ஓவியங்களில் தெரிகின்றது.

கலங்கிய இதயத்தினுள் தெளிவான விடுதலைப் பாதையினை உருவாக்கி

**செல்வா**

விடுகின்ற பாகங்களை ஓவியத்தினுள் விதைத்து விட்டிருக்கின்றார்.

மண்ணோடு மண்ணாக மூடி புதைத்தாலும் வெளிக்காட்டியிருக்கும் படுகொலைகள், மண்டையோடு குவியலாக ஒரே பிரதேசத்தில் செம்மணி அறிந்த போது, அம்பலப்படுத்திய இராணுவத்தின் செயற்பாடுகளை ஓவியங்கள் ஒவ்வொன்றும் முகவரியாக தனித்தனியாக நின்று அடையாளப்படுத்துகிறது.

கிறுக்கலில் ஆரம்பிக்கும் தொடக்கப் புள்ளியில் இருந்து முடிகின்றவரை ஒன்றை மட்டும் தெரியப்படுத்த முடிவு எடுத்து ஆரம்பிக்கிறபோது ஓவியனுக்கு பல கற்பனைகள். அதில் சமூகத்துக்கும் தமிழரின் பண்பாட்டிற்கும் வித்திடுகின்ற போதும், அடிமைப்பட்ட சமூகத்தின் வாழ்க்கை முறையினை வெளிப்படுத்துவதும், அதற்கான வழியாக போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்த்துவதுமான ஓவியங்கள் வரலாற்றில் இடம்பிடிக்கிறது.

என்றுமே அழிக்கப்படாத புகழேந்தியின் ஓவியங்கள் விடுதலைக்கு எவ்வளவு விலை கொடுத்தோம் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றபோது, அனைத்தும் உயிர் பெற்றிருக்கின்றது.

கிழக்கில் பிரமிக்கும் ஒளியின் சாரல் ஊர் முழுவதயும் சூடாக்கி விடுகின்றபோது, ஒதுங்கிக் கொள்ளும் அதற்கான வழியினை தேடுவதுமாக இருக்கிற சூழலைப் போல், போர் வடுக்களைச் சுமந்து நிற்கின்ற மண் காயம்பட்டு, உயிரற்றும் போய்க்கொண்டிருக்கிறபோது, வெளியுலகத்துக்கு தெரியப்படுத்த முடியாமல் இருக்கிற போது, ஓவியங்கள் ஊடான பிரமிப்பு புகழேந்தியின் விடுதலை சுவாசத்தில் எழுந்ததனால் வெளிப்படுத்தி நிற்கிறது.

# அறுவடை நோக்கிய விதைப்பு அது

உலகெங்கும் சிந்தப்படும் மாந்தர் குருதி - புகழேந்தி வரையும் ஓவியங்களின் நாளங்களை ஊடுருவிப் பாய்கிறது.

சினம் கொண்ட சிவப்பு.

நிறங்களில் - பிற நிறங்களை அவர் ஓவியங்களில் பார்த்ததாய் நினைவில்லை.


பச்சை - அவர் ஓவியங்களில் இடம் பெறுவதானால் மரங்களை அவர் வரையவேண்டும். கொடியவர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்ட மொட்டை மரங்களையே தொடும் அவர் ஓவியங்களில் பச்சை வர வாய்ப்பில்லை

மாந்தன் ஆனாலும், மரம் ஆனாலும் புகழேந்தி அடக்கப்பட்ட, வதைக்கப்பட்ட - அழிக்கப்பட்ட மாந்தனையே, மரத்தையே வரைகிறார்.


ஒடுக்குமுறையும், கண்ணீரும், பெருமூச்சும், உயிர்வதையும், சாவுமே அவர் ஓவியம்.

கடுமையான உழைப்பு.

அவர் நடத்திய ஒரு கண்காட்சிக்கு அவர் இட்ட தலைப்பு உறங்கா நிறங்கள்.



தமிழ்நாட்டு ஓவியர் புகழேந்தி



புகழேந்தியின் நிறங்கள் மட்டுமல்ல- புகழேந்தியின் தூரிகையும் உறங்குவதில்லை.

உலகத்தை நேசிக்கிறார். தமிழ் மண்ணை மறக்காமல் - தமிழ் மண்ணை நேசிக்கிறார் உலகத்தை மறக்காமல்.

அடிமைத்தனத்தை அவர் நிறங்கள் ஓங்கி அறைகின்றன.

கோணிப்போன மாந்தர் வாழ்வை நிமிர்த்துவனவாய் அவர் கோடுகள்.

எப்படி வரைகிறார் புகழேந்தி என்பதைச் சொல்ல ஓவியக் கலையில் போதிய அறிவு எனக்கில்லை. ஆனால் - எதை வரைகிறார் அவர் என்பதை எடைபோட என் கண்கள் போதும்.

மக்கள் கலைஞராய் அவரை மதிக்கிறேன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நிறங்களாக்கிய தமிழ் நாட்டின் முதல் ஓவியர் வீர சந்தானம். ஓவியர் புகழேந்தியின் தமிழீழ விடுதலை ஓவியங்களும் வரலாற்றில் தனித்தே நிற்கும். கடல் தாண்டிய தமிழ் நாட்டின் இன உறவுக் கைகொடுப்பாய் மட்டுமல்ல - வாய் - கனத்த சீற்றமாய் அந்த ஓவியங்கள் காலப்பரப்பில் தடம் பதிக்கும்.

வறுமை தின்று தொலைத்த எத்தியோப்பிய பெண்ணின் பாதி உயிர் சுமந்த எலும்புக் கூட்டை அவர் வரைந்தார். இன்றும் அந்த ஓவியம் என் நெஞ்சில் வலித்துக்கொண்டேயிருக்கிறது.

புரட்சிக்கான தேவையைப் பதிவு செய்வதே புகழேந்தியின் ஓவியம்.

அறுவடை நோக்கிய விதைப்பு அது.

**கவிஞர் காசி ஆனந்தன்**

# துயர் துடைக்க முந்துவது



தாமரைச்செல்வி பதிப்பகத்தை நடத்தும் திருநாவுக்கரசு, மனப்பத்தாயம் என்ற தமது முதலாவது கவிதை நூல் மூலம் அறியப்பட்ட யுகபாரதி, ஓவியர் புகழேந்தி ஆகிய மூவரும் ஏககாலத்திலேதான் எனக்கு அறிமுகமானார்கள். இவர்கள் மூவரும் தஞ்சை மண்ணில் ஆழத்தடம் பதித்துள்ள பிராமண கலாசாரப் படைப்புக்களுக்கு எதிராகத் திராவிடப் பாரம்பரியப் படைப்புகளும் வளருதல் வேண்டும் என்பதிலே சிரத்தை ஊன்றிய இளைஞர்களாகவே எனக்கு அறிமுகமானார்கள்.

இவர்கள் அறிமுகமானபோது புகழேந்தியின் ஓவியநூல் ஒன்று பிரசுரமாகி இருந்தது. எரியும் வண்ணங்கள் என்பது அதன் பெயர். அந்தக் காலத்தில் அவர் சென்னையிலுள்ள ஓவியக் கல்லூரியிலே விரிவுரையாளராகக் கடமையாற்றியதால் அடிக்கடி சந்தித்துப் பழகும் வாய்ப்பும் கிட்டியது. இளவயதிலே தமது ஓவிய ஆற்றலுக்கு அகில இந்திய அங்கீகாரத்தை வென்ற பெருமை இவருக்குண்டு.

ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்களுக்குக் குரல் கொடுப்பதும், அத்துயர் துடைக்க முந்துவதும் ஓர் ஓவியனின் பணியென அவர் நம்புகிறார். அத்துடன் ஈழத்தமிழரின் விடுதலைப்போருக்குச் சர்வதேசிய ஆதரவினைப் பெற்றுத்தருவதற்கும் தமது ஓவிய ஆற்றலைப் பயன்படுத்துவதில் புகழேந்தி முன்னணியில் திகழ்கின்றார். இவருடைய ஓவியக் கண்காட்சிகள் மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் நிகழ்ந்துள்ளன. உலகளாவியதாக வாழும் ஈழத் தமிழ் உணர்வாளர்கள் அதிகமாகப் புகழேந்தியின் ஓவியங்களை நன்கு அறிதுள்ளார்கள். ஈழத்தமிழருடைய விடுதலைப் போருக்குக் கவிதை உணர்வு ஊட்டும் காசி ஆனந்தன், இன்குலாப், அறிவுமதி ஆகியோர் இவரைத் தமது தம்பியாக நேசித்து உறவாடுவதை நான் அறிவேன். தமிழ் உணர்வாளராக வாழும் என் மூத்த மகன் அநுரவுக்கும் இவர் தம்பியே. இதனால் இவர் என்மீது அன்பு செலுத்தி, அப்பா என அழைப்பார். இதன் அன்பின் காரணமாக இவரே என்னை முதன்முதலாகத் தைல வண்ணத்தில் ஓவியமாகத் தீட்டினார். மாவீரரான எம் மகன் மித்ரவின் நினைவாக மித்ர நூல் வெளீட்டு நிறுவனம் நிறுவப்பட்ட போது, அவனுடைய ஓவியத்தை தீட்டிப் பணிமனையில் மாட்டி மகிழ்ந்தவரும் அவரே!

- **எஸ்.பொன்னுத்துரை**

# வடக்கு - கிழக்கு சுகாதார அபிவிருத்தி; கிளிநொச்சியில் முக்கிய கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று, நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடை பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச. விக்கிரமன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா, அம்பாறை, மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி , முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் கருத்துரை வழங்கினர். இந்தக் கூட்டத்தில் தமிழீழ அரசியற் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உரைநிகழ்த்தும் போது -

எமது தாயகப் பிரதேசத்திலே சரியான சுகாதார மேம்பாட்டினையும் அதற்கான வசதிகளையும் தென்னிலங்கையைப் போல் ஏற்படுத்த தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிடல்களும் செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு பேணப்படவேண்டும் என்ற தேசியத் தலைவரின் உயரிய சிந்தனையின் செயல் வடிவமாக இக்கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

வட - கிழக்கு தாயகப் பிரதேசத்திலே சுகாதார ஏனைய மேம்பாடுகள் அனைத்தும் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் உள்ளன. இத்துறைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளல் வேண்டும்.

கடந்தகால போரின் காரணமாக மிகவும் பின்தங்கிய நிலையில் வடக்கு - கிழக்கு பகுதிகள் உள்ளன. சுகாதார நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. நீண்ட போர், போர் நிறுத்த உடன்பாட்டின்மூலம் தற்காலிக அமைதிச் சூழலை உருவாக்கியது.

போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கமுடியாத சூழலில் தற்போது நிலவுகின்ற அமைதிச் சூழலில் அவற்றை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது போரைத் திணித்து வந்தது. ஆயுத தாக்குதல்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களை எப்படியெல்லாம் அழிக்க முடியுமோ அதற்கான சகல வழிகளையும் பின்பற்றியிருந்தது.

போர் காரணமாக தமிழர் தாயகத்தில் மருத்துவ, பொருளாதார வளங்கள் பெரும் அழிவுகளைக் கண்டன. அத்துடன் தமிழ் மக்கள்மீது மருத்துவ பொருளாதாரத் தடைகளை இறுக்கமாக விதித்திருந்தது.

போர்க் காலத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த மருத்துவத் துறையினை எதிர்காலத்தில் திட்டமிட்ட ரீதியில் வளர்த்தெடுக்கவேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது.

மக்களுடைய நலன்களை முதன்மைப்படுத்தியதாக மருத்துவத்துறை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.





விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற வடக்கு - கிழக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

## கூரைத்தகடுகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 50 பயனாளிகளுக்கு கூரைதகடுகள் வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்டப் பணிப்பாளர் ச.கோவிந்தராசா தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு யப்பான் நாட்டு நிதியுதவியுடன் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மே -30

1431 : ஆர்லியன்ஸ் முற்றுகையில், ஆங்கிலேயர்களுக்கு எதிராக படைதிரட்டி, போரிட்டு, பிரான்ஸ\ுக்கு வெற்றி தேடித்தந்த தேசபக்தை ஜோன் ஒப் ஆர்க், பர்கண்டியப் படையெடுப்பின்போது பர்கண்டியர்களால் கைதுசெய்யப்பட்டு, ஆங்கிலேயர்களுக்கு விற்கப்பட்டார். தங்களைத் தோல்வியடையச் செய்தவர் என்ற ஆத்திரத்தில் இருந்த பிரித்தானியர், இவர் ஆணுடை தரித்த சூனியக்காரி என குற்றம் சுமத்தி, ரூயன் என்ற இடத்தில் வீதியோர மரக்கம்பத்தில் கட்டி, உயிரோடு தீவைத்து எரித்தனர். 15 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரது ஆதிக்கத்தில் இருந்து பிரான்ஸ் விடுபட, பிரான்ஸியரை ஒன்றுதிரட்டி போரிடவைத்த வீராங்கனை இவராவர்.

1788 : "எனது சிந்தனைகளை மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்வதே என் தொழிலாகும்" என்று கூறிய சிந்தனையாளர் வோல்ட்டர் பரீசில் காலமானார்.

1913 : லண்டனில் ஏற்பட்ட உடன்படிக்கை காரணமாக, முதலாவது பால்கன் போர் முடிவுக்குவந்தது. துருக்கி, ஈனோஸ் முதல் மிடியா வரையுள்ள தனது உரிமைகளை விட்டுக்கொடுத்தது.

1915 : இத்தாலி, ஒஸ்ரியாவுக்கு எதிராக போர் முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தது.

1917 : போலந்து விடுதலை அடைந்ததாக பிரகடனம் செய்தது.

1918 : ஒஸ்ரியா - துருக்கி சரணாகதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

1919 : ஜேர்மனியின் ஆதிக்கத்தில் இருந்து தென்மேற்கு ஆபிரிக்காவின் சில பகுதிகளை பெல்ஜியத்துக்கு மாற்றிக்கொடுக்க பிரிட்டன் ஒப்புக்கொண்டது.

1939 : மங்கோலியா எல்லையில் ரஷ்யா - ஜப்பான் போர் மூண்டது.

1942 : கொலேகன் மீது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுவீசித் தாக்கத் தொடங்கின.

1945 : வரலாற்றில் "செட்டிப் படுகொலை" என்று வர்ணிக்கப்படும் படுகொலை நடைபெற்றது. அல்ஜீரியாவில் தேசியவாதிகள் நூற்றுக்கும் மேற்பட்ட அல்ஜீரியர்களையும், பிரான்ஸியரையும் கொன்றொழித்தனர்.

1965 : டொமினிகன் குடியரசில் அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் அமைதிப்படை அங்கு சென்றடைந்தது.

1966 : சர்வேயர் - 1 எனும் விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. இது நிலாவில் "புயல் கடல்" என்னும் பகுதியில் ஜூன் 2 இல் தரையிறங்கியது.

1967 : நைஜீரியாவில் இருந்து அதனது கிழக்குப் பகுதி தனியாகப் பிரிந்து பியாஃப்ரா குடியரசானதாக அறிவிக்கப்பட்டது.

1971 : மரீனர் - 9 என்ற விண்கலம் செவ்வாயை நோக்கிச் செலுத்தப்பட்டது. இது நவம்பர் 13 ஆம் திகதி செவ்வாயை அடைந்தது, இது செவ்வாய்க்கிரகத்தைச் சுற்றிவர ஆரம்பித்தது. 1972 ஆம் ஆண்டு ஒக்டோபர்வரை இயங்கி 7000 இற்கும் மேற்பட்ட ஒளிப்படங்களை பூமிக்கு அனுப்பிவைத்ததுடன், செவ்வாயின் முழுப்பரப்பையும் வரைபடமாக்கி பூமிக்குத் தந்திருந்தது.

1972 : டெல் அவிவ் விமான நிலையத்தில் வந்திறங்கிய பலஸ்தீனத் தீவிரவாதிகளால் கூலிக்கு அமர்த்தப்பட்ட மூன்று ஜப்பானிய தீவிரவாதிகள், விமான நிலையத்தில் இருந்து கூட்டத்தினர் மீது திடீரென இயந்திரத் துப்பாக்கியால் சுட்டும், கையெறிகுண்டுகளால் எறிந்தும் தாக்கத் தொடங்கினர். இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்தும், காயமடைந்தும் போயினர்.

1981 : பங்களாதேஷ் ஜனாதிபதி ஜியாவுர் ரஃஹ்மான் படுகொலை செய்யப்பட்டார்.

1982 : வட அட்லாந்திக் ஒப்பந்த நாடுகள் கூட்டமைப்பில் (நேட்டோ) ஸ்பெயினும் இணைந்து கொண்டது.

1990 : நிக்கரகுவா கிளர்ச்சியாளர்கள், கிளர்ச்சிகளைக் கைவிட்டு, ஆயுதங்களை ஒப்படைக்க ஒத்துக்கொண்டனர்.

1992 : இந்தியா தனது இரண்டாவது இடைநிலை ஏவுகணையான "அக்கினி"யை வெற்றிகரமாக ஏவியது.

தொகுப்பு - சந்துரு

# கானல் நீர் போன்ற சமாதானத்தை நம்பிக் காத்திராது மண்ணில் இருந்து எதிரியைத் துரத்துவதற்கு தயாராகுங்கள்

## விடுதலைப் புலிகளின் மக்கள் தொடர்பக பொறுப்பாளர்

(கிளிநொச்சி)

எமது தேசியத் தலைவரின் இலக்கு தமிழீழம் தான். அந்தப் புனிதமான தனியரசுக்காகவே உங்களது குழந்தைகள் போராடி வருகிறார்கள் என விடுதலைப் புலிகளின் மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் வின்சன் தெரிவித்தார்.

முழங்காவில் - ஜெயபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, வீரமுரசு நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

ஒவ்வொரு மாவீரர் தினத்திலும் ஒவ்வொரு வெற்றிச் செய்தியோடுதான் எமது தலைவரின் உரை ஆரம்பமாகும். அதை நாம் ஒவ்வொருவரும் ஆவலோடு எதிர்பார்ப்பது வழக்கம். கடந்த மூன்று வருடங்களில் அரசாங்கத்தின் நயவஞ்சகத்தை சர்வதேச சமூகத்துக்குக் காட்டி, அதிலும் வெற்றிபெற்றுள்ளோம்.

கடந்த மாவீரர்தின உரையில்- தலைவர் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என தெரிவித்தார். அந்தப் பொறுமைக் கோட்டை நாம் அண்மித்து விட்டோம். எமது தேச விடுதலையை முன்னெடுப்பதைத் தவிர, எமக்கு வேறு வழியில்லை.

நாம் அடுத்து வரும் மாவீரர் தினத்துக்கு முன் அனைவரும் ஒரு திடசங்கற்பம் பூணுவோம். கானல் நீர் போன்ற சமாதானத்தை காத்துக்கொண்டிருக்கும், எதிரி ஓடுவதற்கு தயாராக இருக்கும் இந்த நேரத்தில் நாம் துரத்துவதற்கு அவனைத் தயாராகுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு - கடந்த புதன்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் ஜெயபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் இளங்கீரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை ஜெயபுரம் வர்த்தக சங்கத் தலைவர் சுரேஸ், பூநகரி- முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சிவசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான் ஏற்றிவைத்தார்.

பொதுப் படத்துக்கான ஈகச் சுடரை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் தமிழன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொதுப் படத்துக்கான மலர் மாலையை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ. கலைவாணன் அணிவித்தார்.

மாவீரர்களின் திருவுருவப் படத்துக்கு அவர்களின் பெற்றோர்கள் மலர்மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் வீரவணக்க உரையை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை, ஜெயபுரம் ஒன்றியத் தலைவர் தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் வின்சன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் ஜெயபுரம் பாடசாலை மாணவர்களினதும், இரணைமாதா நகர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா ஆகிய முன்பள்ளி மாணவர்களினதும் கிராமிய நடனம், வரவேற்பு நடனம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# முல்லைத்தீவில் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி

(முல்லைத்தீவு)

ஓவியர் புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' ஓவியக் கண்காட்சியும், கருத்துப் பகிர்வும் நாளையும், நாளைமறுதினமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு - நாளை காலை 10 மணிக்கு முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியிலும், நாளைமறுதினம் காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதுடன், இந்த இரு இடங்களிலும் கருத்துப் பகிர்வு பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஏற்பாட்டில் இந்த ஓவியக் கண்காட்சியும், கருத்துப் பகிர்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் ஆழியவளை இடைத்தங்கல் முகாமில் யோகேஸ் முன்பள்ளி இன்று மாலை 3 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

(21)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

திருக்குறள்

## நமது நோக்கு

### புஷ்ஷின் கருத்து அம்பலமேறுமா?

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு முழுமையாக ஐந்து மாதங்கள் உருண்டோடி விட்டன.ஆனால், சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறை முதல் பாணமை வரையிலான வடக்கு - கிழக்கு கரையோரப் பகுதிகளில் இன்னமும் புனர் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

ஏதோ - தற்காலிகமான நிவாரணத்தொகை, உணவு மற்றும் அன்றாட பாவனைப்பொருட்களும் தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்திருக்கின்றனவே தவிர, வேறெந்த உருப்படியான காரியமும் நடந்தேறவில்லை.

எல்லாவற்றுக்கும் நிதி வசதிதேவை -ஆனால், அது அரசாங்கத்திடம் கிடையாது. இருந்தால் கூட அதை அரசு, வடக்கு - கிழக்குக்கு செலவிடத்தயாரில்லை. ஏதோ தம்மிடம் உள்ளது நிதியைக் கொண்டு தென்பகுதியை புனரமைக்கும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஆனால், வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் 'வெறும் வாயை மென்று' கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இருக்க இடமில்லை, உடுக்கத் துணியில்லை, சம்பாதிக்க தொழில் உபகரணங்கள் இல்லை. அனைத்தையுமே தொலைத்து விட்டமக்களுக்கு ஒரே நம்பிக்கையாக இருப்பது பொதுக்கட்டமைப்புத்தான்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் தமக்கும் நிதி உதவிகள் கிடைக்கும், சொந்த வீடுகளை, தொழிலைளைப் புனரமைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில்தான் இந்த மக்கள் இருக்கிறார்கள்.

'இதோ மாமன்னர் வருகிறார் பராக் பராக்' என்று திரைப்படங்களில் அரண்மனைக்காட்சிகள் வருவது போன்று - இதோ பொதுக்கட்டமைப்பு வருகிறது என்று எத்தனையோ பேர் 'பராக் பராக்' போடுகின்றனர்.

அரசாங்கத்தரப்பிலிருந்து 'பராக் பராக்' போடுபவர்கள் ஒருபுறமிருக்க, இதை வரவேற்கும் நாடுகள் பட்டியலில் நோர்வே முதல் அமெரிக்கா வரையிலான நாடுகள் இடம்பிடித்திருக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ், முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன், முன்னாள் ராஜாங்க செயலாளராக இருந்த கொலின் பவல் இவர்களோடு கிறிஸ்ரினா றொக்கா என்று அமெரிக்கர்கள் எல்லோருமே பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தியுள்ளனர்.

ஜப்பானின் அகாஷியாகட்டும், உலகவங்கித் தலைவராகட்டும், ஐரோப்பிய யூனியன் நாடுகளாகட்டும் எல்லாமே பொதுக்கட்டமைப்பு வேண்டுமென்று தான் வலியுறுத்துகின்றன.

சகல தரப்புகளும் சமாதானத்திற்காக உழைக்க வேண்டுமென்ற அழைப்புகளை பத்திரிகைகளில் செய்தியாகப் படித்தே மக்களுக்குப் புளித்துப்போய் விட்டது.

அரசாங்கமும் தன் பங்கிற்கு எதனையோ செய்வது போல காட்டிக்கொள்கிறது. வெளிநாடுகளும் அனைவரும் ஒருமித்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டுமென வலியுறுத்துகின்றன.

ஆனால், எதுவுமே நடப்பதாகத் தெரியவில்லை. பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரச தரப்பிலிருந்து எந்த உத்தியோகபூர்வ பதிலும் இல்லையென்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

எல்லாமே சரியென்று கூறும் அரசாங்கம் - எதற்காக பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் இழுத்தடித்து வருகின்றது? இதை அரசாங்கமும் வெளிவிடுவதாக இல்லை. ஏன் இத்தனை தாமதமென்று வெளிநாடுகளும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் தடை, ஜே.வி.பியின் முட்டுக்கட்டை என்பன இருப்பதை அரச தரப்பின் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இப்போது பொதுக்கட்டமைப்பை ஒரு பிராந்தியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானதொருவிடயமாக கயிறு திரிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலில் ஜே.வி.பி இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது. ஆக, இந்தியா- ஜே.வி.பி முட்டுக்கட்டைகளை தாண்டி பொதுக்கட்டமைப்பு வருமா என்ற கேள்விக்கு அரசுதான் பதில் சொல்லவேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்கே இத்தகைய முட்டுக்கட்டைகளை தமிழ் மக்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றதென்றால் - அமெரிக்கா வலியுறுத்துவது போல் - சமாதானப் பேச்சு மூலம் இறுதித்தீர்வை அடையமுடியுமென்பது நிச்சயமாக சாத்தியமானதொன்றாக இருக்கப்போவதில்லை.

## நாடும் நடப்பும்



### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பிந்துனுவெவ கொலையில் நீதி கிடைத்தது யாருக்கு!

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெறுவதற்காக பாதுகாப்புடன் தடுத்துவைக்கப்பட்டிருந்த இருபத்தியேழு தமிழ் இளைஞர்கள் சிறுவர்கள் இரண்டாயிரமாமாண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். மேலும் பதினான்குபேர் படுகாயங்களுக்குள்ளானார்கள். இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்ட ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட மற்றும் மூவரும் உயர்நீதிமன்றத்தினால் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொலைகள் சம்பந்தமாகக் குற்றம்சாட்டப்பட்ட அனைவரும் விடுதலையாகிவிட்டனர் என்று பரமசிவம் சொன்னார்.

புனர்வாழ்வு பெறுவதற்காகப் பாதுகாப்புடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞர்களும், சிறுவர்களும் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட செய்தி அந்தச் சமயத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தச் சமயத்தில்கூட கொழும்புப் பத்திரிகைகள் சல அந்தச் செய்திக்குச் சரியான முக்கியத்துவமளிக்கவில்லை. விடுதலைப் புலிகள்மீது பழியைப் போடக்கூடியமாதிரிக் கூடச் செய்திகள் வெளியிடப்பட்டன. பண்டாரவளையில் இதன் எதிரொலி கேட்டது. மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கூடக் கைது செய்யப்பட்டதாக ஞாபகம் என்றேன்.

இதன் பின் பொலிஸார் விசாரணை செய்து வழக்குத் தொடரப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் ட்ரயல் அட்பார் முறையில் நடந்த வழக்கில் முதலில் 41 பேர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. 2003ஆம் ஆண்டு அரசாங்கம் சாட்சியமில்லையென்று தாக்கல் செய்த மனுவை ஏற்று 23 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். மீதி 18 எதிரிகளும் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். கடைசி 5 எதிரிகளும் உயர்நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். ஐவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன், மொத்தம் 26 வருடங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இவர்கள் மேன்முறையீடு செய்தனர். தங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க ஆதாரமில்லையென்று தமது மேன்முறையீட்டில் தெரிவித்திருந்தனர். மேன்முறையீட்டை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்திருக்கிறது என்றார் பரமசிவம்.

மரண தண்டனையிலிருந்து விடுதலை பெற்ற பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரியாக இருந்த இன்ஸ்பெக்டர் சேனக ஜயம்பதி கருணாசேன, நீதி கிடைத்துவிட்டது என்கிறார். நான் செய்யாத குற்றத்துக்காக ஒவ்வொரு நாளும் காலையில் நான் கண்விழிக்கும்போது என் தலைக்கு மேல் தொங்கும் தூக்குக் கயிறுதான் நினை விருக்கும்.

ஒருவருடம் ஒரு மாதம் 22 நாள்கள் நான் சிறையிலிருந்த ஒவ்வொருநாளும் மரண தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் 200 குற்றவாளிகளுடன் கழிக்க வேண்டியிருந்தது. இந்த அனுபவத்தை என்வாழ்நாளில் என்றும் மறக்கவே முடியாது. நான் சிறைக்குச் சென்ற நாளிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்ரர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வந்து சந்தித்து, ஆறுதல் சொல்லி எனது மன உளைச்சலை நீக்கியதுடன் எனக்கு விடுதலை கிடைக்கும் என்றும் உறுதியளித்துச் சென்றனர். பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கிடையில் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டி னர் என்றும் அவர் சொல்லியிருந்தார். வழக்குக்கு இன்ஸ்பெக்டர் சங்கம் பத்து லட்சம் ரூபாய்க்குமேல் செலவிட்டதுடன், தான் வங்கியில் ஈடுவைத்த தனது சொந்த வீட்டை வங்கி எடுத்துக்கொள்ளப்போவதாக அறிவித்ததும் அந்தக் கடன் இரண்டரை லட்சத்தையும் கொடுத்து மீட்டுத்தந்ததாகவும், இன்ஸ்பெக்டர் கருணாசேன கூறியிருக்கிறார். இவருக்கு முதல் விடுதலையான இவரது சகாவுக்கும் இன்ஸ்பெக்டர்கள் சங்கம் இருபத்தைந்து லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறதாம் என்று நான் சொன்னேன்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு நல்ல அனுபவம் கிடைத்திருக்கிறது. இனி இவர்கள் குற்றவாளிகள், சந்தேகநபர்கள் சம்பந்தமாக மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வார்களென்று எதிர்பார்க்கலாம் என்று பரமசிவம் சொன்னார்.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் கொலைவழக்கில் தூக்குமேடைக்குச் செல்லவிருந்தவந்தவர்கள் உயிர்தப்பி வந்துவிட்டார்கள். அந்த இன்ஸ்பெக்டர் சொன்னதுபோல் அவர் விஷயத்தில் நீதி வென்றுவிட்டது. ஆனால் புனர்வாழ்வு பெற்று வீடு திரும்புவோம், பெற்றோர் சகோதரர்களுடன் வாழ்வோம், தீபாவளியைக் கொண்டாடுவோம் என்று எதிர்பார்த்திருந்த அந்த அப்பாவி இளைஞர்களுக்கும், சிறுவர்களுக் கும், அவர்களைப் பெற்றவர்களுக்கும் எப்போது நீதி கிடைக்கும்? எப்படி நீதி கிடைக்கும்? இப்படித் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மற்றவர்களுக்காவது விரைவில் நீதி கிடைக்குமா? என்று நான் கேட்டேன்.

இதற்கு இறைவன்தான் பதில்சொல்ல வேண்டுமென்று நடந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

### ஒப்பாரியை நிறுத்துங்கள்

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் கடந்த சில வாரங்களாக படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. இதுவரை புலிகள் கொல்லுகிறார்கள் கொல்லுகிறார்கள் என்று உள்ளூரில் மட்டுமல்ல கொழும்பிலிருந்து டெல்கி வரை சென்று ஓலமிட்டார்கள். இன்று சில சமயங்களில் மூச்சுவிட மறந்துவிடுகிறார்கள். புலிகள் கொல்லப்படும் போது பேசாமலிருக்கிறார்கள். ஊடக மேதை கொழும்பில் கடத்திக் கொலை செய்யப்பட்டதை தமிழ் அமைச்சர் புலிகள் மீது பழியைப் போட்டார். இவரும், விமல்வீரவன்சவும் கூட புலிகள் கொலைகளை நிறுத்தவேண்டுமென்று குரல் கொடுத்தார்கள். இவர்கள் மட்டுமல்ல புலிகள் கொல்கிறார்கள் என்று ஓலமிடுபவர்கள் தங்கள் கொலைகளை மறைப்பதற்காகதான் இவ்விதம் கத்துகிறார்கள் என்றே தோன்றுகிறது. கொலைசெய்யப்பட்டவர்களின் சடலத்தைக் காவிக்கொண்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் போய் ஒப்பாரி வைக்கிறார்கள். இதனால் எந்தப் பயனுமில்லையென்று கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்து விட்டார்கள். இனியாவது ஓலமிடுவதை, ஒப்பாரிவைப்பாதை நிறுத்தி - கொலைகள் தொடராமல் நிறுத்துவதற்கு இவர்களும் முன்வரவேண்டும்.

ச.கந்தையா - யாழ்ப்பாணம்

# விடுதலைக்கான தகவல்போரில் புதியதோர் பரிமாணம் - NTT

இன்றைய காலகட்டத்தில் ஐரோப்பிய மற்றும் அமெரிக்கத் தலைவர்கள் ஆயுதப் போரின் அழிவைக்கண்டு, இனிவரும் காலங்களில் நேரடி யுத்தத்துக்கு இடமில்லை. பனிப்போரே தொடரும் எனக்கூறியுள்ளனர். இது எந்தளவுக்கு நடைமுறைக்குச் சாத்தியமானது என்பது




தெரியவில்லை. ஆனால் உலக நாடுகள் போரின் போக்கையும், அதன் தள உருவத்தையும் வேறு வடிவில் மாற்றச் சிந்திக்கின்றன என்பது தெளிவாகின்றது.

எனினும் "போர்" என்ற கருத்தியலில் அவர்களின் சிந்தனை தெளிவுபட்டதாகத் தெரியவில்லை. தமது ஏகாதிபத்தியத்தை பலமிழந்த நாடுகளிடையே, பலம்பெறச் செய்யும் ஓர் உத்திமுறையையே இன்று அவை கையாள முனைகின்றன.

இதற்காக இவர்கள் எடுத்துக் கொண்ட சொற்சிலாக்கியமே "தீவிரவாதம்" எனும் தொடர் சங்கிலித் தாக்குதலாம். இது பெரும்பாலும் மூன்றாம் உலக நாடுகளை குறிப்பாக வளம் நிறைந்த அல்லது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளை ஐரோப்பிய நாடுகள் அல்லது அமெரிக்காவும் அதன் உறவு நாடுகளும் அரச பயங்கரவாதத்தினூடாகத் தாக்கி வருகின்றன.

இவர்கள் தமது அரச பயங்கரவாதத்துக்குக் கொடுத்த அண்ணன் தம்பிச் சொற்களே ஜனநாயக மீட்பும், தீவிரவாத ஒழிப்பும் ஆகும். அதாவது அரச தீவிரவாதத்துக்கு அழகான சொற்களைச் சோடித்து விடுதலை வேண்டி நிற்கும் நாடுகளையும், அமைப்புகளையும் தமது தகவல் யுத்தத்தின் மூலம் அமுக்கி, ஆயுதப்போரைத் திணித்து, அதனை நியாயப்படுத்தி, ஆனந்தப்பட்டுக் கொள்கின்றன.

இங்கே தான் விடுதலை வேண்டி நிற்கும் அமைப்புகள் தமது கருத்தியலை நிலைநாட்டி, தீவிரவாதத்துக்கும், விடுதலைக்குமான வேறுபாட்டை புறத்தள இயல்புகளிலிருந்து பகுத்துக் காட்டவேண்டிய தேவை ஒன்று ஏற்படுகிறது.

இந்தத் தேவையை, ஆயுதப் போரையோ அல்லது அகிம்சைப் போரையோ மட்டும் நடத்தி நிலைநிறுத்திவிட முடியாது. இன்றைய நவீன உலக ஒழுங்கில் அதன் மாற்றம், போக்கு என்பவற்றுக்கு ஏற்ப தம்மைச் சீரமைத்துக்கொள்வதற்கு "தகவல் போர்" ஒன்றே முக்கியமானதும், தேவையான தொன்றாகவும் காணப்படுகிறது.

தகவல் போர் என்றால் என்ன என்பதைவிட அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதே முக்கியமானதாகும். தகவல் போர் அதன் உச்சக்கட்டத்தில் "உளவியல் போர்" ஆக வடிவமைக்கப்பட்டு, அதன்வழி உணர்ச்சிகளை வெளிக்காட்டும் "சமர்க்களம்" ஒன்றை உருவாக்கிவிடும்.

இதுவே இன்று ஈழத்தமிழருக்கு வேண்டியதென்றாகும். இத்தகைய தகவல் போர் ஒன்றின் மூலமே தமது விடுதலைக்கான நியாயப்பாட்டையும், தீவிரவாதம் என்றால் என்ன? விடுதலை என்றால் என்ன? இதிலிருந்து நாம் எவ்வாறு வேறுபட்டிருக்கின்றோம் என்பதையும் எடுத்துக்காட்டி, உலக மக்கள் பார்வையை ஈழ விடுதலையின் பால் திருப்பி, அதன் நியாயப்பாட்டைத் தெளிவுபடுத்தமுடியும்.

இதற்காகத் தொடங்கப்பட்டதே "தமிழீழ தேசிய தொலைக்காட்சி" (NTT) ஆகும். இது ஒரு தமிழர் விடுதலைக்கான தகவல் போரில் புதியதொரு உதயமாகும்.

வடக்கு - கிழக்கிற்குள்ளே முடங்கிக் கிடக்கும் தமிழர் கலைகள், பண்பாடுகள், சலாசார மேன்மைகள் என்பவற்றை, தொப்புள்கொடி உறவைக் கொண்ட உலகெங்கும் பரந்து வாழும் எமது ஈழத்தமிழர்களிடையே ஒரு வலுவூட்டலை ஏற்படுத்த களமாக அமைகின்றது.

இதன்மூலம் இயந்திரமயமான அவர்களது வாழ்வில், பழையகால வாழ்வை மீட்டுப் பார்க்கவும், உளரீதியான இறுக்கம் தளரவும் வழி ஏற்படுகிறது.

ஆனால், இதனைவிட முக்கியமானது - தமிழர் தங்களது நிர்வாக்கட்டமைப்பை வெளிப்படுத்தவும், தமது தலைவிதியை

**வடக்கு - கிழக்கிற்குள்ளே முடங்கிக் கிடக்கும் தமிழர் கலைகள், பண்பாடுகள், சலாசார மேன்மைகள் என்பவற்றை, தொப்பிள்கொடி உறவைக்கொண்ட உலகெங்கும் பரந்துவாழும் எமது ஈழத்தமிழர்களிடையே ஒரு வலுவூட்டலை ஏற்படுத்த களமாக அமைகின்றது. இதன்மூலம் இயந்திரமயமான அவர்களது வாழ்வில், பழையகால வாழ்வை மீட்டுப்பார்க்கவும், உளரீதியான இறுக்கம் தளரவும் வழி ஏற்படுகிறது.**

தாமே நிர்ணயிக்கக்கூடிய ஆற்றல் உண்டு என தகவல் போரின் மூலம் நிறுவுதலுமேயாகும். இதற்காக எதிரியின் தகவல் போரை முறியடிக்க பெரும் பாடுபட வேண்டியிருக்கும்.

தகவல் போரில் எது உண்மை, எது பொய் என்பதைப் பிரித்தறியவைப்பதே பெரும் தாக்குதல் பணியாக இருக்கும். உண்மைகளைவிட பொய்கள் அதிக ஆதாரங்கள்கொண்டு நிறுவப்படும் போது, உண்மை நம்பகத்தன்மை அற்றுப் போகின்றது. தகவல் போரில் இதுவே மிகவும் முடுக்கிவிடப்பட்ட பணியாக இருக்கப்போகின்றது.

இவை அனைத்தையும் முறி

எஸ்.ஜெயா வரணி

யடித்து தமிழருக்கென தனித்துவமான ஒரு தகவல் வழங்கியாகச் செயற்படப்போவதே, தமிழீழ தேசிய தொலைக்காட்சியாகும். இதற்காகவே, பல் துறை அறிவுசார் சமூகம் ஒன்று தெரிவுசெய்யப்பட்டு, 46 பேரைக்கொண்ட ஒரு குழுவாக அது பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

இவர்களுக்கான முதற்கட்ட பயிற்சி முடிவடைந்துள்ளது. இரண்டாம் கட்டமாக இவர்களுக்கான துறைசார் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்பு, இப்பொழுது ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும் ஒளிபரப்பப்படும் ஒருமணிநேர நிகழ்ச்சி ஆறுமணிநேரமாக அதிகரிக்கப்பட்டு ஆசிய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

அப்பொழுது நாம் எல்லோரும் அந்த ஒளிபரப்பைக் காணும் பாக்கியத்தைப் பெறுவோம். கார்த்திகைப் பூவை தனது குறியீடாகக்கொண்ட தமிழீழ தேசிய தொலைக்காட்சி (NTT) சிறந்த அமைப்பு இசையுடன் தனது சேவையை வன்னியிலிருந்து பிரான்ஸ் ஊடாக ஐரோப்பாவுக்குத் தொடர்கின்றது.

ஈழத்தமிழர்களுக்கென பலமான தகவல் தளத்தை அமைத்துக்கொடுக்கப்போகும் NTT சேவையானது, எதிரிகள் மத்தியில் கிலியை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை NTT சேவையானது பலமான புலனாய்வுத் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியதொரு சூழ்நிலைக்கு, எதிராக பலமான திட்ட உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

தங்கள் ராசிக்கு அனுகூலமான மூன்றாம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கிறார். அதோடு ஏழரைச் சனியின் காலம் முடிவுறுவதும் சிறப்பாக அமைகிறது. ஆக மொத்தம் உங்களுக்கு எண்ணற்ற நற்பயனைக் கொடுக்க உள்ளார் சனி பகவான்.

மேலும் லாபத்தில் சஞ்சரிக்கும் ராகு பகவானும், சனிபகவானின் பலத்தைக் கூட்டிக்கொடுப்பார். இதனால் உங்கள் வாழ்வில் பெரியளவு மாற்றம் ஏற்பட்டு, பொருளாதார வசதிகள் தங்களைத் தேடிவரும். அதிர்ஷ்ட தேவதையின் கடைக்கண் பார்வை உங்கள்மேல் சற்றுக்கூடுதலாக விழக்கூடிய நிலைமையை சனி பகவான் உண்டாக்குவார்.

நினைத்த காரியங்கள் குறித்த நேரத்தில் தாமதமின்றி நடந்தேறும். பணம் பலவகையில் உங்களைத் தேடிவரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். தொடர்ந்து வியாதியால் அவதிப்பட்டவர்கள் அதிலிருந்து விடுபடுவார்கள். இதனால் மருத்துவச் செலவுகள் குறையும். ஸ்திர சொத்துகளின் சேர்க்கை உண்டாகும். கணவன், மனைவியிடையே அன்பும், பாசமும் அதிகரிக்கும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்வார்கள். மகிழ்ச்சியுடன் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் யோகமும் உண்டாகும். உங்களை ஒதுக்கி வைத்தவர்கள் தானாகவே வந்து நேசக்கரம் நீட்டுவார்கள். ஆகவே நீங்களும் அன்புக்கரம் நீட்டி சொந்த பந்தங்களைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள். புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அதைக் கச்சிதமாக முடிக்கும் தைரியத்தை சனி பகவான் உங்களுக்கு வழங்குவார்.

உத்தியோகத்தர்களே! இந்த கடக சனிப்பெயர்ச்சி, உங்களை மகிழ்ச்சியில் திக்குமுக்காடச் செய்யப்போகிறது. சனீஸ்வர பகவான் வருமானத்தை மளமளவென அதிகரிப்பார். நெடுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த பதவி உயர்வும் உங்களைத் தேடிவரும். சக ஊழியர்களின் நட்பும், ஆதரவும் உங்களுக்குக் கிடைப்பதால் நீங்கள் செய்கின்ற சிறு சிறு தவறுகள்கூட அமுங்கிப் போய்விடும்.

வியாபாரிகள் மந்தமான நிலையிலிருந்து விடுபடுவார்கள். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பார்கள். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் இருந்த தொய்வுகள் நீங்கி, மனதில் உற்சாகம் தோன்றும். புதிய சந்தைகளைக் கண்டுபிடித்து, அங்கு வியாபாரம்

## இடபம்

செய்து, பெரும் லாபத்தை அள்ளுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். வங்கிகளில் கடன்பெற்று வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். குறித்த காலத்துக்குள் அந்தக் கடனையும் அடைப்பீர்கள்.

விவசாயிகளுக்கு இது சாதகமான பெயர்ச்சி, கடகத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், விளைச்சலைப் பெருக்கி லாபத்தை அள்ளித் தருவார். கால்நடைகளின் மூலம் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். வெகுநாட்களாகத் தள்ளிப் போட்டிருந்த நிலையான சொத்துகள் வாங்கும் திட்டம் கைகூடும். புதிய நிலங்களில் வித்தியாசமாக விவசாயம் செய்து இலாபத்தை அள்ளுவீர்கள்.

அரசியல்வாதிகளே! இந்த மூன்றாம் இட சனிபகவானின் சஞ்சாரத்தால் உங்களை எதிர்த்தவர்களின் பலம் குறையும். உங்களிடமிருந்து அவர்கள் விலகி நிற்பார்கள். அதேசமயம் நீங்கள் எதிரிகளின் குறை, குற்றங்களைப் பெரிதுபடுத்தாமல் அவர்களைச் சாமர்த்தியமாக அரவணைத்துச்சென்று உங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். எதிர்பார்த்த பதவிகள் உங்களைத் தேடிவரும்.

கலைத்துறையினரின் திறமைகள் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களைச் செய்வீர்கள். அதில் வெற்றியடைய சில செலவுகளைச் செய்வீர்கள். இந்த சனிப்பெயர்ச்சி காலத்தில் பல கலைஞர்களுக்கு விருதும், பாராட்டுகளும் கிடைக்கும்.

பெண்கள் குடும்பத்தின் தூண்கள் என்கிற நிலைமையை இந்த தைர்ய ஸ்தான சனிபகவான் உங்களுக்குக் கொடுப்பார். இல்லத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். எதிர்பார்த்திருந்த சுபகாரியங்கள் நடக்கும். குடும்பத்தில் அமைதி, அந்நியோன்யம் நிலவும், கணவரிடம் அன்பைப் பெறுவீர்கள். ஆடை, ஆபரணங்களை வாங்குவீர்கள். கன்னியர்களுக்கு விரும்பிய வரன் அமையும்.

மாணவமணிகள் கல்வி, கேள்விகள் மட்டுமல்லாமல் விளையாட்டிலும் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் நேசத்தைப் பெறுவீர்கள். சனிபகவானின் அருளால் நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். கல்லூரிகளில் விரும்பிய பாடப்பிரிவும் கிடைக்கும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் சனீஸ்வரருக்கு எள்ளுத் தீபமேற்றி, ஏழை எளியோருக்கு அன்னதானம் செய்யவும்.

# உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பாக புலிகள் தனித்து தீர்மானிக்க முடியாது!

## ஜனாதிபதி செயலக பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் தனித்துத் தீர்மானமெடுப்பதற்கு இடம் வழங்கப்படவில்லையெனவும், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் தேவைகளைப் பாதுகாப்பதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி செயலக பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே தற்போது உடன்பாடு காணப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய, ஒருங்கிணைந்த பொதுக் கட்டமைப்பின் உயர்சபை, சிங்கள,தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்திடமிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மூவரைக் கொண்டே அமைக்கப்படும்.

இதன்போது பெரும்பான்மை தீர்மானத்திற்கு இடம் வழங்காமல் இருப்பதற்கும், எந்தவொரு செயற்திட்டமும் அங்கீகரிக்கப்படும் போது மூவரது விருப்பத்தின்படி நிகழ்வதற்கும், இரு தரப்பும் உடன்பட்டுள்ளன.

இந்தச் சபையில் கலந்துரையாடப்பட்டு தேவையான திருத்தங்களுடன், மூவராலும் அனுமதிக்கப்படும் செயற்திட்டங்களுக்கு மாத்திரம் நிதி வழங்கப்படும். இந்த நிதி, உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்கள் மூலம், திட்டத்தைச் செயற்படுத்துகின்ற அரச நிறுவனம் அல்லது அமைச்சுக்கோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கோ வழங்கப்படும். (தே)

# சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மனநோயாளர் தொகை அதிகரிப்பு!

## டாக்டர் ஜெகான் மென்டிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் இரண்டு வீதமானோர் மனநோயாளிகளாக உள்ளதாக, அங்கோடை மனநோயாளர் வைத்தியசாலைப் பணிப்பாளர் டொக்டர் ஜெகான் மென்டிஸ் தெரிவித்தார்.

இதேபோன்று சமூகத்தில் 20 வீதமானோர் குறிப்பிடத்தக்களவு மனநோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மனநோயாளிகளின் எண்ணிக்கை சிறிதளவு அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் மனநோயாளர் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக அரசு மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு வருவதாகவும் டொக்டர் மென்டிஸ் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் தகவல்களுக்கமைய மனநோயாளர் சுகாதார சேவை பன்முகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அனைத்து மாவட்டங்களிலும் மனநோயாளர் புனர்வாழ்வு மத்திய நிலையத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தற்போது மிகுந்தலை, பலத்முல்ல, கேகாலை ஆகிய பிரதேசங்களில் இந்தப் புனர்வாழ்வு மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நாட்டிலுள்ள அனைத்துப் பிரதான மருத்துவமனைகளிலும், மனநோய் விசேட வைத்தியர்கள் நியமிக்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (தே)

# சுனாமி அனர்த்த மீளமைப்பு பணிகளில் இலங்கை அரசின் செயலற்ற தன்மை!

## சாடுகிறது இங்கிலாந்து டெலிகிராப் நாளிதழ்

லண்டன் —

சுனாமி மீளமைப்புப் பணிகளில் இலங்கை அரசு செயலற்றுக் கிடப்பதாக இங்கிலாந்தின் டெலிகிராப் நாளிதழ் சாடியுள்ளது.

28 ஆம் திகதிய டெலிகிராப் நாளிதழில் இடம் பெற்றுள்ள செய்திக் கட்டுரையில் அரசின் இயலாமை குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தென்னிலங்கையில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட காலிப் பகுதியைப் பார்வையிடச் சென்றபோது அங்கே தென்பட்டவை அனைத்தும் கூடாரங்கள்தான்.

பல மில்லியன் பணத்தைக் கொட்டிக் கொடுத்த இங்கிலாந்து மக்கள், சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான வீடுகளைக் கட்ட, தங்களது நிதியால் செங் கற்களும், சீமெந்தும், மரங்களும் லொறி லொறியாக மக்களுக்குச் சென்றடைந்திருக்கும் என்று கற்பனை செய்துகொண்டிருப்பார்கள். அவர்கள் உண்மை நிலையைப் பார்த்தால் மூச்சடைத்து நின்றுவிடுவார்கள். அந்தப் பகுதியில் இப்படியான ஒரு நிகழ்வுக்கு இடமே இல்லை.

இது குறித்து சிங்கள ஊடகவியலாளர் சுகத்பால கூறுகையில் -

இங்கே தற்காலிக கொட்டகைகளில் மக்கள் மட்டும் உறங்கவில்லை. பணிகளைச் செய்ய வேண்டிய அனைவருமே உறங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்றார்.

இந்த அவலத்திற்கு அவர் கூறுகின்ற காரணம்: எல்லா தோடம்பழங்களும் (நிதியுதவிகளும்) தனது கூடையிலேயே சேகரிக்கப்பட வேண்டும் என்கிற அரசின் எண்ணத்தால் மீட்புப் பணிகள் மிகமிக மெதுவாக நடைபெறுகின்றன என்கிறார்.

தற்காலிக கொட்டகைகள் ஒரே அறையைக் கொண்டவைதான். தகரக் கூரைகளால் அமைக்கப்பட்டவை. இவை பாதுகாப்பானதும் அல்ல. இந்தக் கூரைகளை அமைக்கும்போது மரங்களுக்காக ஆணி அடிப்பதால் அவை பாதிப்படைந்து, மழைநேரங்களின்போது ஒழுகத் தொடங்கும் என்று கூறும் தன்னார்வ அமைப்புடன் தொடர்புடைய பொறியியலாளர்கள் இது குறித்து அரசிடம் எச்சரித்ததாகவும் தெரிவித்தனர். ஆனால் யாரும் இது குறித்து அக்கறை கொள்ளவில்லை.

ஐ.நா.சபையின் அறிவித்தல் ஒன்றையும் எமது டெய்லி டெலிகிராப் செய்தியாளர்கள் பார்வையிட்டனர். இந்தத் தற்காலிக குடியிருப்புக்கள் ஒரு மாதத்திற்குள்ளாகவோ அதற்கு முன்னதாகவோ தரம் உயர்த்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசின் நிர்வாகத்தைச் சுட்டிக்காட்டிப் பேசும் தன்னார்வ அமைப்பினர்- அதன் இயலாமையை, ஆற்றாமையை வெளிப்படுத்தினர்.

காலியில், இன்னும் தற்காலிக கொட்டகைகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஆனால், உள்ளூர் அரச நிர்வாகமோ, சர்வதேசத்தின் கண்ணில் இவர்கள் பட்டுவிட்டால் தமக்குக் கெட்டபெயர் என்று எண்ணி, இந்தத் தற்காலிக தங்குமிடங்களை அதிகாரபூர்வமாக மூடப்போவதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஐ.நா. அதிகாரி ஒருவர் -

இலங்கையில் யதார்த்த நிலைமைகளுக்கும், அரச அதிகாரிகளுக்குமிடையே அடிப்படையிலேயே தொடர்பில்லாமல் இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

அரசின் இந்த அறிவிப்பை மக்கள் ஒன்றும் எளிதில் மறந்துவிடமாட்டார்கள். அது கோபத்தையும் கொந்தளிப்பையும் ஒவ்வொரு நாளும் அதிகரிக்கவே செய்யும் என்றார் அவர்.

தற்காலிக தங்குமிடங்களில் இருப்பவர்கள்- எந்த அதிகாரியும் எங்கள் நிலை குறித்து அக்கறைப்பட்டது இல்லை என்றனர். கடுகொட மசூதி அருகே அமைக்கப்பட்டுள்ள தங்குமிடத்திலுள்ள ஒருவர், 2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எமது வீடுகள் இன்னும் சீரமைக்கப்படவில்லை. ஆனால் அரசியல்வாதிகளின் வீடுகள் ஒரே இரவில் சீரமைக்கப்படுகின்றன என்று குமுறுகிறார்.

அரசு அறிவித்தபடியான நிவாரண உதவித் தொகை குறித்து அனைவரும் புகார் தெரிவிக்கின்றனர். அரசாங்கம் அறிவித்தபடியான 5 ஆயிரம் ரூபா உதவித்தொகை 5 முறை வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், 2 முறைதான் இதுவரை வழங்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழான உலர் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கான உணவுக் கூப்பன்களைப் பெற இன்னும் இவர்கள் காத்திருக்கிறார்கள்.

இந்தப் பகுதியைப் பார்வையிட்ட காலி மாவட்ட மேலதிக செயலாளர் வீரக்கோன், 75.51 வீத பணிகள் முன்னேற்றகரமாக நடந்து வருவதாக ஆவணங்களைக் காட்டுகிறார்.

அரசு அறிவித்த 5 ஆயிரம் ரூபா தொகை வந்துகொண்டிருக்கிறது. விடுபட்ட பெயர்கள் இணைக்கப்பட்டிருக்கிறது என்று அரச அதிகாரி வீரக்கோன் பதிலளித்தார்.

சுனாமிப் பேரலையால் உரிய ஆவணங்கள் அழிந்துபோய் உதவித்தொகைக்காக காத்திருப்போர் எண்ணிக்கையும் அதிகம் என்ற உண்மை ஒருபுறமிருக்க, அரச அதிகாரிகள் இப்படியான அறிக்கைகளைத் தயாரிக்கின்றனர்.

மக்களின் குமுறல்களும், முறையீட்டு மனுக்களும் அவர்களுக்குப் பயன்படுகிற பொருள்களாக மாறவேண்டும் என்பதே எமது விருப்பம் என்று அதில் கூறியுள்ளார்.

இந்தக் கட்டுரை இலங்கையின் செயலற்ற தன்மையை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்தியிருக்கிறது என்பதை 'டெலிகிராப்பின் ஒப்பீனியன்' என்ற பகுதி வெளிப்படுத்தியுள்ளது.

'வெட்கங்கெட்ட இலங்கை' என்ற தலைப்பில் இந்தக் கட்டுரைக்கான எதிர்வினைகளும் இடம் பெற்று இலங்கை அரசாங்கத்தின் ஆற்றாமையை அம்பலப்படுத்தியுள்ளது டெலிகிராப்.

# திருகோணமலையில் படையினர், மக்கள் மத்தியில் துண்டுப்பிரசுரம் விநியோகிப்பு!

திருகோணமலை —

திருகோணமலையில் அரசின் உயர் தலைமையின் நலன்களுக்கு பலியாகாமல் செயற்படுவது பற்றி சிந்திக்குமாறு பராக்கிரம பாகு படைப்பிரிவு என்ற பெயரிலான துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திருகோணமலையில் இராணுவச் சிப்பாய்களிடமும், சிங்கள மக்களிடமும் இந்தத் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப் பட்டது.

அரச தலைமையும், படை உயர் தளபதிகளும் சுகபோகங்களை அனுபவிக்க, சாதாரண நிலை இராணுவத்தினர் இப்போதும் வீதியோரங்களில் உட்கார விடப்படாமல் 24 மணி நேரமும் பாதுகாப்புக்கடமை என்ற பெயரில் நிற்பதையும், போரில் பலியாக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி படையினர் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும் எனவும் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இன்றைய அமைதிக் காலத்திலும் தளபதிகளால் சாதாரண படையினர் வதைக்கப்படுவதை கடுமையாக விமர்ச்சித்து படையினர் வீடு செல்வது பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று பராக்கிமபாகு படைப்பிரிவு என்ற பெயரில் திருகோணமலையில் வெளியிடப்பட்டுள்ள இந்தத் துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரம் திருகோணமலையில் படையினர் மற்றும் சிங்கள மக்கள் தரப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(10)



# போர் ஓய்வு காலத்தில் தமிழர் தாயகம் ஆக்கிரமிக்கப்படுவதை ஏற்கமுடியாது!

## திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்

திருகோணமலை —

தமிழர்களின் பாரம்பரிய தாயகபூமி ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டதும், அதற்கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கியதும் வரலாறு. எனவே, இப்போதும் போர் ஓய்வு என்பதற்காக, தமிழர் தாயகம் ஆக்கிரமிப்புச் செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பது எம்மால் முடியாத ஒன்றே. ஆகவேதான், திருகோணமலையில் புத்தர் சிலை அமைப்பு என்ற போர்வையில் நடைபெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை திருமலை வாழ் தமிழ் மக்கள் எதிர்த்துப் போராட்டம் நடத்தியபோது நாமும் அதற்குச் சார்பாக செயற்பட்டோம். நாம் வேறு தமிழ் மக்கள் வேறு அல்ல என்று நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு, மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் திருமலை மாவட்ட போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் தலைவராக இதுவரை செயற்பட்டு, தற்போது பணியை நிறைவுசெய்து நாடு திரும்பும் ஜேன் லெடாங் தனது பணி நிறைவு குறித்து அறிவிக்கவும், புதிய தலைவராக நியமிக்கப்பட்ட ஆர்தரை அறிமுகப்படுத்தவுமென, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை மாவட்டப் பொறுப்பாளரை தமது அலுவலகத்தில் சந்தித்தார்.

மேற்படி சந்திப்பின்போதே, திருமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து எழிலன் விளக்கியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

திருமலை புத்தர் சிலை விவகாரம் மாவட்டத்தின் இயல்பு நிலையைக் குழப்பியுள்ளது. இந்த நிலையில், கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க உயர்மட்ட அமைச்சர்களுடனான சந்திப்பையடுத்து, நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்த தமிழ்மக்கள் பிரதிநிதிகள் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளனர். இந்த நிலையில் ஜூன் 2 ஆம் திகதிக்கு இடையில் புத்தர் சிலை அகற்றப்படுவதற்கும், அதன் மூலம் திருமலையில் சமாதான சூழல் குழப்பப்படாது இருப்பதற்கும் கண்காணிப்புக்குழுவினர் தமது உயரிய பங்களிப்பை வழங்கவேண்டும்.

சிலை அகற்றப்படாவிட்டால் திருமலையில் மீண்டும் பதற்ற நிலைமையும், இயல்பு நிலை பாதிப்பும் உருவாகும். இது பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

அத்துடன், மூதூர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கட்டைபறிச்சான் மற்றும் மிகிந்தபுர இராணுவ தடை முகாம்களூடாக பொருட்களைக் கொண்டுசெல்ல அண்மைக்காலமாக இராணுவத்தினர் தடைவிதித்து வருகின்றனர்.

இது தொடர்பாக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றபோது, இராணுவத்தினர் ஒப்பந்த விதிகளைச் சுட்டிக்காட்டி, புரிந்துணர்வு ஒப்பந்தப்படியே தாம் நடந்துகொள்வதாக கூறப்பட்டது. இதனை அப்பகுதி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியே கூறியிருந்தார். ஆனால், இதனைக் கூறிய இராணுவ அதிகாரி - தானும் தனது படையினரும் ஒப்பந்த நடைமுறையில் கூறப்பட்டபடி, 160 நாட்களுள் பொதுக்கட்டடங்களிலிருந்து இராணுவம் வெளியேறிவிட வேண்டும் என்ற விதியை மட்டும் இன்றுவரை நிறைவேற்றவில்லை.

அதாவது, அவரது முகாம் அமைந்துள்ளது நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமான கட்டடம் (ஜி.பி.எஸ்) ஒன்றில். தான் கூறும் ஒப்பந்த விதிகளை நிறைவேற்றாது காலங்கடத்தும் அதிகாரியின் கூற்று வேடிக்கையாகவுள்ளது என்றும் சந்திப்பில் எழிலன் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் காலை 11 மணி முதல் 2 மணி வரையான 3 மணி நேரம் நடைபெற்றது.

(10)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமெரிக்க இராஜாங்க செயலரை கதிர்காமர் அடுத்தவாரம் சந்திப்பார்!

கொழும்பு —

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் கொண்டோலிசா ரைஸுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அடுத்த வாரம் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

அமெரிக்காவின் அட்லான்டா-ஜோர்ஜியாவில் மூன்று நாட்கள் சி.என்.என் நிறுவனத்தால் நடத்தப்படும் 14 ஆவது சர்வதேச விவகார மாநாட்டில் இலங்கை சார்பில் கலந்து கொள்ளும் லக்ஷ்மன் கதிர்காமர்- அமெரிக்காவின் மிகப்பலம் வாய்ந்த பதவியாகக் கருதப்படும் இராஜாங்க செயலர் பதவியில் உள்ள கொண்டோலிசாவை சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

முன்னர் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் பிரத்தியேக ஆலோசகராக, பயங்கரவாதம் தொடர்பான விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த ரைஸ் - தொடர்ந்தும் உலக பயங்கரவாதம் தொடர்பான அமெரிக்காவின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் முக்கிய பங்காற்றி வருகிறார்.

அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் இடம்பெற்றுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பையும் இணைத்துக்கொண்டு சுனாமி பொதுக் கட்டமைப்பை அமைக்கலாம் என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில் கிளின்டன் குறிப்பிட்டுள்ளமை தொடர்பாக விளக்கம் கொடுக்கவே கதிர்காமர் இந்த அவசர சந்திப்பைக் கோரியுள்ளார் என்று தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் விடயத்தில் ஆதரவான கருத்துக்களை முன்வைக்க ஆரம்பித்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தையும், ஏனைய சர்வதேச நிறுவனங்களையும் அமெரிக்கா கண்டிக்க வேண்டுமென்றும், அமெரிக்க பிரமுகர்களும் விடுதலைப் புலிகள் விடயத்தில் கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்றும் கதிர்காமர் அழுத்தம் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உயர் மட்ட சர்வதேச பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் சி.என்.என் மாநாடு இன்று முதல் ஜூன் முதலாம் திகதி வரை நடைபெறும். அதைத் தொடர்ந்து கொண்டோலிசா ரைஸ் கதிர்காமர் சந்திப்பும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# ஏறாவூரில் கிரனேட் வெடித்து முஸ்லிம் இளைஞர் மரணம்!

மட்டக்களப்பு —

தனிப்பட்ட தகராறு ஒன்றின் போது கிரனைட் வீசி தாக்குதல் நடத்தச்சென்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர் அது வெடித்து பலியானதுடன், மேலும் மூவர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - ஏறாவூரில் இடம்பெற்றது.

உயிரிழந்த இளைஞரான கபூர் குசேனுக்கும் (வயது 22), படுகாயமடைந்த இளைஞர்களான முகமது பாஸில் மற்றும் பதுர்தீன் காதர் ஆகியோருக்குமிடையே ஏற்பட்டிருந்த தனிப்பட்ட தகராறே இச்சம்பவத்துக்கு காரணம் எனத் தெரியவருகிறது.

கொல்லப்பட்ட கபூர் குசேன் தனது சகோதரியை பாஸில் மற்றும் பதுர்தீன் காதர் ஆகியோர் கேலி செய்ததால் ஆத்திரமுற்றிருந்தார்.

கேலி செய்த இருவரும் உணவகம் ஒன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த வேளை, கபூர் குசேன் கைக்குண்டு ஒன்றை மறைத்துக் கொண்டு அங்கு சென்றபோது தவறுதலாக அது நிலத்தில் வீழ்ந்து வெடித்துள்ளது.

இதன்போது கபூர் குசேன் உயிரிழந்தார். மற்றைய இரு இளைஞர்களும் அங்கு நின்ற குசன் சலீன் என்ற பாடசாலை மாணவனும் படுகாயமடைந்தனர்.

# திருமலை குளத்தில் மூழ்கி இருவர் பரிதாப மரணம்!

திருகோணமலை —

திருகோணமலை - பெரியகுளத்தில் படகு கவிழ்ந்ததில் சட்டத்தரணி ஒருவரும் வங்கி அதிகாரியொருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காப்பாற்றப்பட்டனர்.

நேற்றுக்காலை விடுமுறைக்காக பெரியகுளத்துக்கு இவர்கள் சென்றபோதே இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

சட்டத்தரணி ரஜனிகாந்த் (வயது 26), ஹற்றன் நஷனல் வங்கி அதிகாரி சஞ்சீவன் (வயது 34) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்களுடன் மேலும் இரு நண்பர்கள் சிறு படகொன்றில் குளத்தில் சவாரி செய்தபோதே இந்த விபத்து நேரிட்டது.

இதனையடுத்து காணாமற்போன இருவரதும் சடலங்களை கடற்படை சுழியோடிகள் பலத்த சிரமத்தின் மத்தியில் மீட்டனர்.

# குளித்துக்கொண்டிருந்த வயோதிபர் தொட்டிக்குள் வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் —

குளித்துக்கொண்டிருந்தபோது நீர்த்தொட்டியில் தவறிவீழ்ந்து முதியவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று யாழ். நகரில் இடம்பெற்றது. இராமநாதன் வீதி-யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா பொன்னுக்கோன் (வயது-70) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை தொட்டியில் நீர் அள்ளிக் குளித்துக்கொண்டிருந்தபோது தவறிவீழ்ந்து மேற்படி முதியவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## எஸ்.பியை விடுவிக்கக் கோரி

# சந்திரிகாவுடன் மிலிந்த நடத்திய பேச்சுக்களில் முடிவேதுமில்லை!

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதியின் உதவியைக் கோரும் ஒரு முயற்சியாக, மிலிந்த மொறகொட கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஜனாதிபதியைச் சந்தித்தார்.

திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி தனது பிரத்தியேக ஜனாதிபதி அதிகாரத்தைப் பாவிக்க வேண்டுமென மிலிந்த மொறகொட கேட்டுக்கொண்ட போதும், ஜனாதிபதி இதற்கு இணங்கவில்லையெனத் தெரியவருகிறது.

உயர் நீதிமன்றத்தையும், அதன் நீதிபதியையும், இரு தடவைகள் திஸநாயக்க அவமதித்துக் கருத்துக் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்டிய சந்திரிகா, இதை மன்னித்து விடுதலை வழங்கும் பட்சத்தில், உச்ச நீதிமன்றத்தைத் தான் நளினப்படுத்தியதாக அர்த்தப்பட்டுவிடலாம் என்று தெரிவித்துள்ளார்.

சிறையிலுள்ள கைதிகளை ஜனாதிபதியின் கட்டுப்பாடுகளற்ற அதியுச்ச அதிகாரங்களைப் பாவித்து விடுதலை செய்யமுடியும் என்பது உண்மை என்றும், சிறைக் கைதிகளில் சிலரை ஜனாதிபதியின் மேலதிக அதிகாரங்களைக் கொண்டு விடுதலை செய்யக் கூடிய மேலதிக விதிகளைத் தான் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் உருவாக்கியுள்ளமையையும் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, இந்த மன்னிப்பு வழங்கும் திட்ட விதிகளுக்குள் திஸநாயக்க அடங்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், ஜனாதிபதி விரும்பினால் திஸநாயக்கவின் விடுதலை மிக இலகுவாக நடைபெற்று விடலாம் என்று ஐ.தே.க. உறுப்பினர்கள் நம்புகிறார்கள்.

## யுனிசெப்பின்...

யுனிசெப் பிரதிநிதி ரெட்சைபனுடன் யுனிசெப்பின் வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மாற்றலாகிச் செல்லும் யுனிசெப் பிரதிநிதி ரெட்சைபனுக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் நினைவுப் பரிசில் வழங்கிச் சிறப்பித்தார்.

## புலிகளின்...

அது யுத்தநிறுத்தமீறலாக இருக்கும்.

கிழக்கில் தற்போது இடம்பெற்று வரும் சம்பவங்களைத் தூண்டிவிடும் நிலையில் ஊடகங்கள் செய்தி வெளியிடும்போது பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்.

மாறாக இந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டது போல யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு தற்போது எவ்வித ஆபத்தும் இல்லையெனவும் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

## சர்வதேச...

அனைத்துப் பகுதிகளுக்கும் பாரபட்சமின்றி சென்றடைய வேண்டும்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கு நிதியுதவிகள் சென்றடைவதை உதவிவழங்கும் நாடுகள் அவதானிக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## புரிந்துணர்வு...

இலங்கையிலிருந்துதான் படையினர் தப்பி ஓடுவதென்றில்லை. அபிவிருத்தி அடைந்த பல நாடுகளிலிருந்தும் படையினர் தப்பியோடியுள்ளனர். அத்துடன் - அமெரிக்கா, இந்தியா உட்பட பெருமளவு நாடுகளில் படையினருக்கு அங்கீகாரமுள்ளது.

சில நாடுகளில் படையினர் பயணம் மேற்கொள்ளும்போது ரயில்கள் மற்றும் பஸ்களில் விசேட இருக்கை வசதிகளும் உள்ளன. ஆனால், இலங்கையில் படையினருக்கு எந்தவித அங்கீகாரமும் இல்லாத காரணத்தாலேயே பெருமளவானோர் படையிலிருந்து விலகுகின்றனர். சிவில் சமூகம் மற்றும் அரச திணைக்களங்களில் கூட படையினர் தமது குறுகிய கால விடுப்பில் செல்லும் வேளையிலும் எவ்வித அங்கீகாரத்தையும் பெறுவதுமில்லை என ரி.ரி.ஆர். சில்வா தெரிவித்தார்.

இதேவேளை - படையிலிருந்து விலகுவோரில் பெரும்பான்மையானோர் தமது 5 வருட சேவையை முழுமையாகப் பூர்த்திசெய்யாதவர்களென நிர்வாகத்தை சேர்ந்த பிரிகேடியர் ருவான்பாகா தெரிவித்தார்.

படையிலிருந்து விலகும் 87 வீதமானோர் 5 வருட சேவையை விட குறைந்தளவு சேவையை செய்தவர்கள். அத்துடன் - குடும்பத்தவரின் வற்புறுத்தல் மற்றும் முகாம்களிலுள்ள அடிப்படை வசதிக் குறைவு, வட பகுதியில் பணிபுரியும் படையினரெனில் அவர்கள் விமான மூலமோ அல்லது கடல் வழியாகவோ பயணம் செய்வதில் ஏற்படும் சிரமங்கள் போன்றவற்றாலும் படையினர் தப்பி யோடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# சுண்டுக்குளியில் மின்னல் தாக்கி எட்டு வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளியில் நேற்றுமாலை மின்னல் தாக்கியதில் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

சுண்டுக்குளி - சந்தனமாதா கோயிலடியைச் சேர்ந்த சிறிஸ்நந்தராஜா தேவப்பிரியன் என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

நேற்றுமாலை பிரஸ்தாப சிறுவன் வீட்டுக்கு அருகில் நின்றிருந்தவேளை அருகிலிருந்த பனையை மின்னல் தாக்கியதாகவும் பனையில் கட்டப்பட்டிருந்த கம்பி மூலம் மின்சாரம் பாய்ந்ததிலேயே அதற்கருகில் நின்ற சிறுவன் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மின்னல் தாக்கத்துக்குள்ளான பனையும் எரிந்துபோனது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

# விக்டர் ஐவன் வீட்டருகே நடமாடிய ஆயுததாரி!

'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக காலியில் அமைந்துள்ள விக்டர் ஐவனின் வீட்டுக்கருகில் துப்பாக்கிதாரி ஒருவர் நடமாடியது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை விக்டர் ஐவனின் வீட்டாரும், அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சிவராமின் நினைவு நிகழ்வில் விக்டர் ஐவன் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இது தொடர்பாக தேசிய, சர்வதேச ஊடக அமைப்புக்களுக்கு முறையிட்டுள்ளதாகத் தெரிவித்த ஐவன் - பொலிஸாருக்கு முறைப்பாடு எதையும் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைப் பொலிஸ் மீது நம்பிக்கை இல்லாததுதான் இதற்குக் காரணம் என்று விக்டர் ஐவன் மேலும் தெரிவித்துள்ளார். (01)

## புலிகளின்...

யிலிருந்து கறுத்தப்பாலத்துக்கும் பயணம் செய்வதற்கான பயண அனுமதி வழங்குமாறு- கண்காணிப்புக் குழு ஊடாக புலிகள் நேற்று முன்தினம் விடுத்த வேண்டுகோளையும் அரசு நிராகரித்தது.

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் மற்றும் போராளிகளுக்கு பாதுகாப்பு அனுமதி வழங்குவதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருப்பதற்கு - பாதுகாப்பு நிலைமைகளே காரணம் என்று பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. அரசாங்கத்தின் இந்தப் போக்கு விடுதலைப் புலிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் மட்டு - அம்பாறை முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டபோது தம்மிடம் கோரியிருந்தால் பாதுகாப்பு வழங்கியிருப்போம் என்றும், அவ்வாறு செய்யாததால் இந்தக் கொலைக்கு தாம் பொறுப்பேற்க முடியாதெனவும் அரசாங்கம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கும் - கிழக்கும் ...

நாங்கள் அதை நிராகரிக்கிறோம். தமிழரின் தாயகப் பகுதி வடக்கு - கிழக்கு என்பதை ஜே.வி.பி எதிர்க்கவில்லை. வடக்கும் கிழக்கும் சிங்களவரின் தாயகப் பிரதேசம் என்பது எங்கள் நிலைப்பாடு.

ஒரே நாடு, ஒரே தேசியம் என்பதே எமது கொள்கை. சிறிலங்கா சிங்களவர்களுக்கானது. இங்கே வாழும் மத, இன சிறுபான்மையினருக்கான உரிமைகள் பாதுகாக்கப்படும். பொதுக்கட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி வெளியேறுவது குறித்து எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது.

பொதுக்கட்டமைப்பை சந்திரிகா மேற்கொண்டால் கடுமையான முடிவுகளை நாம் மேற்கொள்வோம். அரசை முழு வீச்சில் எதிர்ப்போம். அரசை ஒருபோதும் ஆதரிக்கமாட்டோம்.

பொதுக்கட்டமைப்பு என்பது நாட்டை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கூடுதலான அங்கீகாரம் அளிப்பது என்பதைத் தவிர அதில் ஒன்றும் இல்லை. தற்போது விடுதலைப் புலிகளிடம் கிழக்குப் பகுதியில் ஒரு சிறுபகுதி மட்டுமே இருக்கிறது. பொதுக்கட்டமைப்பு உருவானால், தமிழர் வாழும் பிரதேசம் முழுவதும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்.

டக்ளஸ் தேவானந்தவும், ஆனந்த சங்கரியும் தற்போது கிழக்கிற்குச் சென்று வருகிறார்கள். பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு, விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துக்கு அவை சென்றுவிட்டால் இவர்களால் எளிதில் அங்கே நுழையமுடியாது.

பொதுக்கட்டமைப்பு என்பது புலிகளுக்கு அளிக்கப்படுகிற சர்வதேச அங்கீகாரம். பொதுக்கட்டமைப்பை ஏற்பதன் மூலம் விடுதலைப் புலிகளை ஜனநாயக சக்தி என்று சந்திரிகா ஏற்றுக்கொள்வதாக அர்த்தம். தற்போது தாயகம், மொழி, நிர்வாகத்துக்காக போராடும் விடுதலைப் புலிகள் இந்தப் பொதுக்கட்டமைப்புக்கு பின் இவற்றை நிர்வகிக்கத் தொடங்குவர்.

ஜே.வி.பி முன்வைத்த மாற்றுத் திட்டம் நல்ல யோசனை. அதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சம்பந்தன், ஆனந்தசங்கரி, டக்ளஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளதை வரவேற்கிறோம். ஆனால் ஜனாதிபதி என்ன செய்யப்போகிறார்? அவர் ஏற்கனவே பொதுக்கட்டமைப்பை ஒப்புக்கொண்டு விட்டார். ஆனால் பிரதமருக்கோ அது குறித்து எதுவும் தெரியாத நிலை.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள், வான் படை களையப்பட வேண்டும் என்பதில் உறுமய உறுதியாக இருக்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் இரும்புக் கோட்டையை சந்திரிகா உடைக்கவேண்டும்.

புலிகளை யுத்தத்தால் சந்திரிகா வெல்லவேண்டும். அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை உருவாக்கி அப்பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கவேண்டும். உதவி வழங்கும் நாடுகளின் தொகை குறித்தும் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு கருத்தை தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் அரசு வெளிப்படையாக இயங்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சை 2005

## அளவையியலும் விஞ்ஞான முறையும்

K.T.மோகன்

பகுதி I, II, III ஆகியவற்றிலிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிந்தெடுத்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

முக்கிய குறிப்பு :

இவ்வினாத்தாளில் பயன்படுத்தப்படும் தர்க்கமாறிலிகள் பின்வருமாறு :

மறுப்பு : ~ உட்கிடை : → இணைப்பு : ^ உறழ்வு : V

இரட்டைநிபந்தனை : ↔

பரீட்சார்த்திகள் இவற்றைத் தவிர, பிற மாறிலிகளைப் பயன்படுத்தலாகாது. தேற்றங்களை நிறுவவேண்டியிருக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்த்துப் பெறுகை முறையில் தேற்றங்களை (உ+ம் : டீமோர்கன்) பயன்படுத்தலாகாது.

## பகுதி- I

1. அ. பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்திற்கும், அதுபற்றிய தற்காலத்தைய விளக்கத்திற்குமிடையிலான வேறுபாட்டைத் தருக.

ஆ) "எல்லா பாம்புகளும் நஞ்சுடையன அல்ல" என்பது பொய் ஆயின் பின்வரும் கூற்றுக்களின் உண்மைப் பெறுமானம் யாது?
(i) சில பாம்புகள் நஞ்சுடையன அல்ல.
(ii) பாம்புகள் நஞ்சுடையன அல்ல.
(iii) அனைத்துப் பாம்புகளும் நஞ்சுடையன.

இ) பின்வருவன சரியானவையோ, பிழையானவையோ என்பதை முரண்பாட்டுச் சதுரத்தை அடிப்படையாகக் கொண்டு கூறுக.
(i) முக்கோணிகள் மட்டுமே தட்டை உருவினது என்றால் தட்டை உருவின யாவும் முக்கோணிகள்.
(ii) எல்லா முக்கோணிகளும் தட்டை உருவினது அல்ல என்பது உண்மை ஆயின் எந்த முக்கோணிகளும் தட்டை உருவின அல்ல என்ப உண்மை ஆகும்.
(iii) A பொய்யாக இருக்கும் போது தொடர்புள்ள E சந்தேகம்
(iv) O உண்மையாய் இருக்கும் போது தொடர்புள்ள I உண்மையாகும்.
(v) E உண்மை எனில் அதன் எதிர்மறையின் வழிப்பேறு சந்தேகம்.

(ஈ) பின்வரும் முரண்பாடுகளை விளக்குக.
(i) வழிப்படுத்தி முரண்பாடு
(ii) உப மறுதலை முரண்பாடு

2. அ) வழிப்பெறுகை விதிகளின் மூலம் கீழ்வரும் வாதங்கள் வலிதானவையா அல்லது வலிதற்றவையா என்பதைத் துணிக. வாதம் வலிதற்றதாக இருக்கம் போது ஏற்படும் போலியையும், வலிதானதாக இருக்கும் போது சரியாக உபயோகிக்கக் கூடிய வழிப்பெறுகையின் பெயரையும் கூறுக.
(i) எல்லா மாணவர்களும் திறமையானவர்கள் ஆகவே எல்லா திறமையானவர்களும் மாணவர்கள்.
(ii) சில பழங்கள் இனிப்பதில்லை ஆகவே இனிக்காதன பழங்கள்.
(iii) பாடுவன எல்லாம் குயில்கள் அல்லாதன அல்ல. ஏனெனில் குயில்கள் பாடுவன அல்லாதன அல்ல.
(iv) சில மனிதர் துணிவற்றவர்கள் ஆகவே சில துணிவற்றவர்கள் மனிதர் அல்லாதவர்கள் அல்லர்.
(v) சில முற்றாத பழங்கள் மாங்காய்கள் ஏனெனில் சில மாங்காய்கள் முற்றிய பழங்கள்.

ஆ) (i) O எடுப்பிற்கு ஏன் வலிதான எதிர்மாற்றத்தினைப் பெற முடியாது என்பதை காரணம் காட்டி விளக்குக.

(ii) A எடுப்பின் எதிர்மாற்றம் ஏன் A எடுப்பாக இல்லை.

(iii) "அரசர்கள் வீரர்கள்" என்னும் எடுப்பிற்கு வலிதான எதிர்வைக்கையினைப் பெற்றுக் காட்டுவதுடன் வலிதற்ற மறுமாற்ற எதிர்வைக்கையினையும் தருக.

3. அ) பின்வரும் நியாயத் தொடைகள் வலிதானவையோ, வலிதற்றவையோ என்பதைத் துணிக. நியாயத் தொடை ஒன்று வலிதற்றதாயின் மீறப்பட்ட விதியை / விதிகளைச் சுட்டிக் காட்டி இடம்பெற்றுள்ள போலியையும் கூறுக.
(i) எல்லா மனிதர்களும் அறிவுடையோர்கள் என்பதோடு இங்குள்ள அறிவுடையவர்கள் எல்லோரும் பணக்காரர்கள் இதன் காரணமாக எல்லா மனிதர்களும் பணக்காரர்கள் ஆவர்.
(ii) விஞ்ஞானிகளும் அதேபோல் மெய்யியலாளர்களும் திறமைசாலிகள் ஆகவே மெய்யியலாளர்கள் எல்லோரும் விஞ்ஞானிகள் ஆவர்.
(iii) எல்லா எழுத்தாளர்களும் இயக்குநர்கள் அல்ல ஏனெனில் நடிகர்கள் மட்டுமே இயக்குனர்கள் என்பதுடன் பல எழுத்தாளர்கள், நடிகர்கள் அல்லர்
(iv) சில குதிரைகள் ஓடுவன அல்ல எல்லாக் குதிரைகளும் பாய்வன ஆகவே பாய்வன எல்லாம் ஓடுவன.

ஆ) நியாயத்தொடையின் பிரதான விதிகளைக் கருத்தில் கொண்டு குறை பேரெடு கூற்றிலிருந்தும், மறை சிற்றெடு கூற்றிலிருந்தும் ஏன் வலிதான, முடிவைப் பெற முடியவில்லை என்பதை விளக்குக.

(இ) நியாயத் தொடையின் நான்கு பேருருக்களில் நான்காவது உருவை உதாரணம் தந்து விளக்குக.

4. அ) கீழ்வரும் வாதங்களை வகுப்புக்களின் அடிப்படையில் குறியீட்டில் தந்து, வென்வரிப் படத்தின் மூலம் அவற்றின் வாய்ப்பைத் துணிக.
(i) சைமனும் குமாரனும் மாணவர்களாக இருப்பதனால், மாணவர்கள் புத்திசாலிகள் ஆவர்.
(ii) சில மிருகங்கள் சாதுவானவை தாவர உண்ணிகள் மட்டும் சாதுவானவை ஆகவே அனேகமான மிருகங்கள் தாவர உண்ணிகள் ஆகும்.
(iii) கமல் ஓர் எழுத்தாளன். சிற்பி ஓர் எழுத்தாளன். ஆகவே எழுத்தாளர்கள் உள்ளனர்.

ஆ) வென்வரை படங்களைப் பயன்படுத்திப் பின்வரும் எடுகூற்றுக்களில் இருந்து எவ்வாறு வலிதான முடிவுகள் பெறலாம் எனக் காட்டுக. வலிதான முடிவுகளைப் பெற முடியாது போயின் முடிவைப்பெற முடியாது எனக்கூறுக.
(i) எல்லா P யும் M ஆகும். சில S கள் M அகும்.
(ii) P எதுவும் M அல்ல. S எல்லாம் M ஆகும்.
(iii) ரோஜாக்கள் சிவப்பு அல்ல. எல்லா மலர்களும் சிவப்பானவை அல்ல.

(இ) "அரிஸ்டோட்டில் ஓர் தத்துவ ஞானியும் விஞ்ஞானியும் ஆவார்" என்று உங்களுக்குத் தரப்பட்டால் வென்வரை படத்தைப் பயன்படுத்தி கீழ்வருவன வலிதான அனுமானங்களா? வலிதற்ற அனுமானங்களா என்பதைக் காட்டுக.
(i) அரிஸ்டோட்டில் ஓர் விஞ்ஞானி ஆவார்.
(ii) எல்லா தத்துவஞானிகளும் விஞ்ஞானிகள் ஆவர்.

## பகுதி II

5. அ) உண்மை அட்டவணையை பயன்படுத்தாது கீழ்வருவனவற்றிற்கு பதில் தருக. உங்களுக்கு $[P \rightarrow (Q \vee R)]$ என்ற கூற்று பொய்யெனத் தரப்படுமாயின், கீழ்வரும் வாக்கியங்கள் உண்மையோ, பொய்யோ அல்லது உண்மைப் பெறுமானத்தை தீர்மானிக்க முடியாதோ எனத் துணிக. உங்களுடைய பதில் அவசியமான படிமுறைகளை மட்டும் கொண்டதாகவும் முடிந்தவரை சுருக்கமானதாகவும் இருத்தல் வேண்டும்.
(i) $[(P \rightarrow \sim Q) \wedge \sim R]$
(ii) $[P \rightarrow \sim(Q \wedge R)]$
(iii) $[(\sim P \vee \sim Q) \vee R]$
(iv) $[(P \wedge \sim Q) \rightarrow R]$

ஆ) பின்வரும் வாக்கியங்கள் பொய்யாவது எப்போது என்பதை உண்மை அட்டவணை நேரல் முறையைப் பயன்படுத்தித் தீர்மானிக்குக.
(i) A யும் B யும் அதிகரிக்குமாயின் ஒன்றில் A குறையும் அல்லது B குறைய மாட்டாது.
(ii) ஒன்றில் கமல்வரின் ரஜனி வருவார் அல்லது அஜித் வரமாட்டார்

இ) "அளவையியலோ பொருளியலோ கடினமானதல்ல" என்னும் வாக்கியத்திற்கு அளவையியல் ரீதியில் வலுச்சமனுள்ள இரு குறியீட்டாக்கங்களைத் தருக. உண்மை அட்டவணையைப் பயன்படுத்தி அவற்றின் பெறுமானத்தைக் காட்டுக.

6. கீழ்வரும் வாதங்களை குறியீட்டில் தந்து, அவற்றின் வலிதை அல்லது வலிதின்மையை உண்மை அட்டவணையின் நேரல் முறை மூலம் துணிக.

அ) தேர்வில் A, B இருவரில் ஒருவர் மட்டுமே வெற்றி பெறுவார். ஆகவே A தேர்வில் வெற்றி பெற்றால் B தேர்வில் வெற்றி பெறவில்லை அத்துடன் B தேர்வில் வெற்றி பெற்றால் A தேர்வில் வெற்றி பெறவில்லை.

ஆ) உற்பத்தி குறைந்தால் மட்டுமே வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். உற்பத்தி அதிகரிப்பதற்கு தூண்டினாலாயினே வாழ்க்கைச் செலவு அதிகரிக்காது. உற்பத்தி குறைவடையவில்லையாயின் உற்பத்தி அதிகரிப்பதற்கு தூண்டுதல் இல்லை. ஆகவே அதிக உற்பத்திக்குத் தூண்டப்பட்டுள்ளது.

இ) சுனாமி அடிக்குமாயின் மீன்வளம் குன்றுமாயின் மீன்பிடித் தொழில் விருத்தியடையாது. மீன்பிடித் தொழில் விருத்தியடையும் என்பது பொய்யாயின் மீனின் விலை அதிகரிக்குமெனின் மரக்கறி விலை அதிகரிக்காது என்பது பொய். ஆகவே சுனாமி அடிப்பதுடன் மீன்வளமும் குன்றும் ஆயின் மீன், மரக்கறி என்பவற்றின் விலை அதிகரிக்கும்.

ஈ) அவன் அளவையியல் படிக்கிறான் ஆயின் அவன் அளவையியலில் அல்லது கணிதத்தில் திறமைசாலி ஆவான். கணிதத்தில் அவன் திறமைசாலி ஆயின் அவன் ஒன்றில் அளவையியலில் திறமைசாலி ஆவான் அல்லது அளவையியல்

படிக்கிறான். அவன் கணிதத்தில் திறமைசாலி ஆயினே அவன் அளவையியலில் திறமைசாலி ஆவான். ஆகவே அவன் அளவையியல் படிக்கிறான் ஆயின் ஆயினே அவன் அளவையியலில் திறமைசாலி ஆவான்.

7. அ) கீழ்வரும் தேற்றங்களை பெறுகை முறையினால் நிறுவுக.
   (i) $(P \vee \sim P)$
   (ii) $[(P \wedge \sim Q) \rightarrow \sim(P ? Q)]$

ஆ) எடுப்பளவையியலில் தேற்றத்தின் பயன்பாடுகளை விளக்குக.

இ) பின்வரும் வாதத்தை நேர், நேரல், நிபந்தனை என்ற மூன்று பெறுகை முறைகளின் மூலம் நிறுவுக

$$[(P \rightarrow Q) \rightarrow (R \rightarrow S)].(P \rightarrow Q) \therefore (R \rightarrow S)$$

8. கீழ்வரும் வாதங்களைக் குறியீட்டில் தந்து, எடுகூற்றுக்களிலிருந்து முடிவைப் பெறுவதன் மூலம் அவை வலிதானவை எனக் காட்டுக.
   அ) மனிதன் சந்திரனுக்கு சென்றால் மட்டுமே சந்திரனில் முயலைக் காணலாம் என்பது உண்மையல்ல. மனிதன் சந்திரனுக்குச் செல்கிறான் ஆகவே சக்கர தெய்வத்தினால் சந்திரனில் முயல் வரையப்பட்டது.
   ஆ) பணமும், கல்வியும் இருக்குமாயின் ஒருவன் செல்வாக்கைப் பெறலாம். பணம் இருந்து கல்வி இல்லையாயின் அவனால் செல்வாக்கைப் பெறமுடியாது. ஆகவே பணம் இருக்குமென்பது உண்மையாயின் கல்வியும் இருக்கும் ஆயினாயினே ஒருவன் செல்வாக்கைப் பெறமுடியும்.
   இ) அவன் முயற்சியாளனாகவும் அதிஷ்டசாலியாகவும் இருந்தால் அவனுக்குத் தொழில் கிடைக்கும் ஆகவே அவனுக்குத் தொழில் கிடைக்கவில்லையாயின் ஒன்றில் அவன் முயற்சியாளன் அல்ல அல்லது அதிஷ்டசாலி அல்ல.
   ஈ) அந்த ஓவியம் கவர்ச்சியுள்ளதாயின் ஆயினே அது பெறுமதி மிக்கதாகும். அந்த ஓவியம் கவர்ச்சியுள்ளது அல்லது யதார்த்தமானது ஆனால் இரண்டுமல்ல. ஆகவே அந்த ஓவியம் பெறுமதி மிக்கதாயின் அது யதார்த்தமானதல்ல.

### பகுதி III

9. கீழ்வருவனவற்றுள் யாதேனும் ஐந்திற்கு சிறு குறிப்புகள் தருக.
   (i) நியாயத்தொடர் (ii) சிந்தனை விதிகள்
   (iii) சுருக்கநியாயத்தொடை (iv) வகுப்பு இணைப்பும், வகுப்பு இணைவும்
   (v) அரிஸ்ரோட்டலின் நியாயமாலை (vi) நற்சூத்திரங்கள்.

10. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளில் காணப்படும் போலிகள் எவை என எடுத்துக்காட்டி, ஒவ்வொரு போலியும் நிகழ்ந்துள்ள விதத்தைச் சுருக்கமாக விளக்குக.
   (i) கடந்த ஐந்து வருட காலத்தினுள் அவர் ஒருபோதும் வெளிநாடு செல்லவில்லை. ஆகவே அவர் ஒருபோதும் வெளிநாடு செல்லவில்லை.
   (ii) விஞ்ஞானமுறை என்ற பாடம் விஞ்ஞானத்தின் முறைகளை ஆராய்கின்றது. விஞ்ஞான முறைகள் விஞ்ஞான ரீதியானவை ஆகவே விஞ்ஞானமுறை விஞ்ஞான ரீதியானவை.
   (iii) பொதுக்கட்டமைப்புக் குறித்த சுரேசின் கருத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது ஏனெனில் அவர் தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்.
   (iv) பேச்சுச் சுதந்திரம் யாப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமையாகும் என்பதனால் கடந்த மாதம் இடம்பெற்ற இனக்கலவரத்திற்கு சத்திய பாலாவினது பேச்சு - காரணமாக இருப்பினும் அவரைக் கைது செய்யலாகாது.
   (v) A யை விட B பெரியது. B யை விட A சிறியதாக இருப்பதுதான் இதற்குக் காரணமாகும்.

11. கீழ்வரும் போலிகள் ஒவ்வொன்றுக்கும் உதாரணங்கள் தந்து விளக்குக.
   (i) பொருந்தாமுடிவுப் போலி (ii) முறையற்ற சாத்தியப்பதப் போலி
   (iii) அமைப்புப் போலி (iv) பல்வினாப் போலி

12. (அ) எடுப்புக்களுக்கான வென்வரைபடங்களுக்கும், ஒயிலரின் வரைபடங்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கூறுக.

(ஆ) இருதலைக்கோள் வாதத்தின் வகைகளை விளக்குக.

(இ) 'சோக்கிரட்டீஸ் இறப்பவன்' என்ற எடுப்பை விபரிப்பதில் பாரம்பரிய அளவையியலும், நவீன அளவையியலும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்குக.

(ஈ) பின்வரும் உறழ்வினை வல்லுறழ்வு எனக் கருதி P யும் Q வும் உண்மை எனின் $(P \vee Q)$ என்பதன் பெறுமானம் யாது?

## அளவையியலும் விஞ்ஞான முறையும் பகுதி - II

பகுதி I,II,III ஆகியவற்றிலிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி - I

1. அ) இயற்கை விஞ்ஞானங்களில் நான்கினதும் சமூக விஞ்ஞானங்களில் நான்கினதும் அனுபவமில் விஞ்ஞானங்களில் இரண்டினதும் பெயர்களைத் தருக.

ஆ) "அளவையியல் ஒருங்கே நியம விஞ்ஞானமும், நியமம்கூறும் விஞ்ஞானமும் ஆகும்" இக்கூற்றினை ஆராய்க.

இ) உளவியலின் இயற்கை விஞ்ஞானத்திற்குரிய பண்புகளையும், சமூக விஞ்ஞானத்திற்குரிய பண்புகளையும் வெவ்வேறாக விளக்குக.

ஈ) ஆயுர்வேதத்தை விஞ்ஞானமெனக் கருதலாமா? நியாயம் தருக.

2. அ) புலமைவாதிகள் எட்டுக்கால் பூச்சியை ஒத்தவர்கள். கைவினையாளர்கள் எறும்புகளைப் போன்றவர்கள். தேனீயைப் போலச் செயற்படும் போதுதான் அறிவு வளர்கிறது. பிரான்சிஸ் பேக்கனின் இந்நோக்கினை விளக்குக.

ஆ) தூய விஞ்ஞானங்களும், பிரயோக விஞ்ஞானங்களும் தத்தமது வளர்ச்சிக்கு பரஸ்பரம் ஒன்று மற்றொன்றின் செல்வாக்கில் எவ்வாறு சார்ந்துள்ளதென்பதை விஞ்ஞான வரலாற்றிலிருந்து பெற்ற உதாரணங்களின் மூலம் விளக்குக.

இ) அனுபவ விஞ்ஞானங்களில் கணிதத்தின் பங்கினை விளக்குக.

3. (அ) விஞ்ஞான நோக்கலிற்குரிய நிபந்தனைகளையும் நோக்கலின் போது எழும் போலிகளையும் விளக்குக.

(ஆ) (i) விஞ்ஞானம் புலக்காட்சியில் எவ்வளவு தூரம் தங்கியுள்ளது.
   (ii) ஏன் விஞ்ஞானிகள் பரிசோதனைகளைத் திரும்பத் திரும்பச் செய்கிறார்கள்.

4. பின்வருவனவற்றிற்கு குறிப்புகள் எழுதுக.
   (i) இயற்கையின் ஓர் சீர்மை விதி
   (ii) தீர்ப்புச் சோதனை
   (iii) பொப்பேரிய அளவை விதி
   (iv) "விஞ்ஞானத்தில் கண்டுபிடிப்பு முறை என்று எதுவுமில்லை"

### பகுதி - II

5. அ) பின்வருவன பற்றி குறிப்புரை வரைக.
   (i) நிகழ்தகவு பற்றிய புள்ளிவிபரவியல் அடிப்படையிலான விளக்கம்.
   (ii) நிகழ்தகவும், தற்கால விஞ்ஞானமும்.

ஆ) ஒரு பாத்திரத்தினுள் ஆறு சிவப்புப் பந்துகள், எட்டு பச்சைப் பந்துகள், பத்து மஞ்சள் பந்துகள் இருக்கின்றன. இரு தொடர்ச்சியான தடவைகளில் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பந்து பாத்திரத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டது. முதலில் எடுக்கப்பட்ட பந்து மீண்டும் பாத்திரத்தினுள் போடப்படுவதில்லை.
   (i) குறைந்தது ஒன்று பச்சையாக வருவதற்கு
   (ii) இரண்டும் ஒரே வகை நிறமாக வருவதற்கு உரிய நிகழ்தகவு என்ன? உமது விடையை எவ்வாறு பெற்றீர் என்பதையும் காட்டுக.

6. அ) சராசரியிலிருந்தான விலகலைக் கணிப்பிடும் இரு விலகல் அளவைகளை விளக்குக.

ஆ) கோடலற்ற மாதிரியின் பண்புகள் யாவை

இ) விஞ்ஞானத்தில் புள்ளிவிபரவியலின் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டுக.

(ஈ) மாதிரி எடுப்பாய்வு முறையை விளக்குக.

7. அ) தொல்பொருளியலில் அகழ்வாய்வு முறையின் இயல்புகளை விளக்குக.

ஆ) ஏடுகளின் ஆய்வினூடாகப் பெறப்படும் தரவுகளின் நம்பகத்தன்மை குறித்து விளக்குக.

இ) "சமூகவியலாளர்கள் பழங்குடி மக்களை கவனமாக ஆராய்வதற்கு அவர்களுடன் பல வருடங்களைச் செலவிடுகின்றனர்" இது ஏன் அவசியம் என்பதையும் இது எவ்வகையான ஆய்வு முறை என்பதையும் விளக்குக.

(ஈ) சமூக விஞ்ஞானங்களின் புறவயத்தன்மை குறித்து ஆராய்க.

8. அ) விஞ்ஞானத்தில் அளவீடு நிறைவேற்றும் சிறப்பான பங்கு யாது?

ஆ) விஞ்ஞானத்தில் அளவீட்டினைச் செய்வதற்காக பயன்படும் கீழ்வரும் அளவுத்தட்ட வகைகளை விளக்குக.
   (i) இடைவெளி அளவுத்திட்டம்
   (ii) விகிதாசார அளவுத்திட்டம்.

இ) சமூக விஞ்ஞானத் தரவுகளின் ஸ்திரத்தன்மையினை ஆராய்க? இதில் அளவீட்டின் பங்கு யாது?

(தொடரும்....)